குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 48] விபவ ஆண்டு பங்குனித்திங்கள் 10—4—89 [இதழ் 5

ஸ்ரீ அப்பர் சுவாமிகள்

சிவ

சிவ

குருபூஜை விழா 30—4—89 ஞாயிற்றுக்கிழமை

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத்திங்கள்இதழ்

மலர் 48 | 10–4–89 | இதழ் 5

உட்பொருள்

எண்		பக்கம்
1	அப்பருக்கோர் அணிவிழாக் காண்போம் ...	225
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	230
3	போதமும் சித்தியும் ...	234
4	கடிதங்கள்	237, 239
5	சைவ உணவு உண்பவர்களுக்குப் பெருமை, ஆயுள் அதிகம் ...	238
6	குருபூஜை விழா திருநாள் விபரம் ...	240
7	கர்நாடக இசையில் கமகம் ...	241
8	சைவசித்தாந்த வரலாறு ...	246
9	திருமுறை ஓதுவார்க்குத் திருமலைமன்னர் தந்த செப்புப் பட்டயம் ...	252
10	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ...	255
11	கணநாத நாயனார் ...	258
12	ஸ்ரீ சொக்கலிங்கமும் ஸ்ரீ குமரகுருபரரும் ...	262
13	செய்திகள் ...	264
14	எதிர்காலம் ...	268
15	இதழ்வழிச் சைவசமயக் கல்வி V. பாடம்-3. ...	273

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

அன்றியுயிர் சற்சித்தே
யாநந்த மில்லையதற்
கொன்றுபல வாற்றானு
மெய்துவிக்க — நின்ற
முறையாலு மீசனெடு
முற்றுஞ் சமதை
யறையாமை கூறியது மாம்.

— முத்திநிச்சயம் 19

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 5

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

விபவ பங்குனி 10—4—1989

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

அப்பருக்கோர் அணிவிழாக் காண்போம்

சைவம்காத்த தலைவர்கள் :

சைவசமய ஆசாரியர்களை இருவகையாகக் கூறுவர். சமயாசாரியர், சந்தானசாரியர் என்பவர்கள் அவ்விருவகையினர். சமயாசாரியர் நால்வரில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் புறச்சமயங்களால் சைவசமயத்திற்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளை அகற்றி, சைவச் செந்நெறியினை மக்கள் மத்தியில் நிலை நிறுத்திய பெருமைக்குரியவர்கள். திருநாவுக்கரசர் தமிழகத்தின் வட பகுதியில் ஆண்டுவந்த பல்லவ மன்னன் மகேந்திரவர்மனும் மக்களும் சமண சமயத்தில் ஈடுபட்டிருந்தமையை, இறைவன் அருள்வழி நிகழ்த்திய அற்புதங்களால் மாற்றிச் சைவசமயத்தை அங்கு நிலைபெறச் செய்தவர். திருஞானசம்பந்தர் தென்பகுதியில் ஆண்டுவந்த பாண்டிய மன்னன் நெடுமாறனும் மக்களும் சமண

சமயத்தின் கொள்கையைப் பின்பற்றி வந்தபோது, இறை அருளையும் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகியவர்களின் துணையையும் கொண்டு மாற்றிச் சைவத்தை நிலைநிறுத்தியவர். இங்ஙனம் இருபெரும் அருளாளர்களும் தமிழகத்தில் பரவிஇருந்த சமண இருளை, கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அகற்றிச் சைவ ஒளியினைப் பரப்பிய சீர்மையாளர்கள் ஆவர். இவ்விரு ஆசாரியர்களின் குருபூஜை விழா, (திருநாவுக்கரசர் சித்திரைச் சதயம் - 30—4—89) (திருஞானசம்பந்தர் வைகாசி மூலம் 23—5—89) சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் வருகிறது.

நான்குபேர் போனவழி :

சமயாசாரியர் நால்வரில், திருநாவுக்கரசர் தாசமார்க்கத்தில் நின்று, சரியை எனும் தொண்டு நெறி ஒழுகி, தம் வாழ்வாலும் வாக்காலும் மக்களைச் சைவநெறியில் ஈடுபடுத்தியவர். திருஞான சம்பந்தர், சத்புத்திர மார்க்கத்தில் நின்று, கிரியா நெறி வாழ்ந்து அங்ஙனமே மக்களைச் சைவச் செந்நெறியில் ஈடுபடுத்தியவர்; சுந்தரர் சகமார்க்கத்தைக் கடைப்பிடித்து யோகநெறி நின்றுதமது வாழ்வாலும், வாக்காலும் மக்களைச் சைவநெறியில் வாழச் செய்தவர். மணிவாசகர் சன்மார்க்கத்தில் நின்று, ஞான நெறி ஒழுகி, அங்ஙனமே, மக்கள் சைவ நெறியை உணரச் செய்தவர்.

அன்பும் அறிவும் செறிந்த பெருநெறி :

இந்நால்வரும், அன்புநெறியில் நின்று தோத்திரத்தின் வாயிலாக மக்கட்குச் சைவநெறியை விளக்கிய சிவஞானிகள் ஆவர். சந்தானகுரவர் நால்வரும் அறிவு நெறி நின்று சாத்திரத்தின் வாயிலாக மக்கட்குச் சைவநெறியின் தத்துவத்தை உணர்த்தியஅருளாளர்கள் ஆவர். இங்ஙனம்இருபெரும் ஆசாரியப் பெருமக்களும் அன்புநெறி, அறிவுநெறியாக விளங்கும் சிவ நெறியை முறையே தோத்திர நெறி, சாத்திரநெறி என்று பிரித்துச் சிறப்பித்துக் கூறப்படுகின்ற சைவ சமயப் பெருநெறியினை நாட்டு மக்களிடையே பரவச் செய்த பேரருளாளர்கள் ஆவர். . இவர்கள் இறைஅருள் துணையுடன் சைவசமயவழிநின்று மனிதசமுதாயத்தை அன்பு, அறிவு நெறிக் கருவூலங்களாகிய தோத்திர சாத்திரப் பாடல்களால் வாழ்விக்க வந்த பெருமக்கள். இவர்களை நன்றி அறிதலோடுபோற்றி வழிபட்டு உயர வேண்டுவது சைவமக்களின் தலையாய கடமையாகும். எனவே இவர்களின் குருபூஜைவிழா நாட்களில் இயன்ற அளவு இல்லத்திலும், ஆங்காங்கு உள்ள

திருக்கோயில்களிலும், மன்றங்களிலும் இவர்கள் திருமேனி களுக்குச் சிறப்பாக அபிடேக அலங்கார, நிவேதன ஆராதனை செய்து, தேவாரப் பாடல்களை ஓதி உய்தி பெறவேண்டுவது அவசியமாகும்.

" கூற்று " - சொல் விளக்கம் :

30—4—89 ஆம் நாள் அன்று நிகழ இருக்கிற அப்பரடிகள் குருபூஜை விழாவை முன்னிட்டு அவர் முதன் முதல் அருளிய திருப்பதிகப் பாடல்களின் பொருளைத் தெளிவாக்கிக் கொள்வது பொருத்தமானதாகும். இறைவருள் பெற்று அவர் அருளிய முதல் பாடல், "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்பதாகும். இப்பாடலில் வரும் "கூற்று" என்னும் சொல் குறித்துப் பொருள் காண்பது அவசியம். 'கூற்று' என்பதற்குக் கூற்றுவன் எனப் பொருள் கூறுவர். இந்த இடத்திற்கு அது அத்துணைப் பொருத்த மாகத் தோன்றவில்லை. ஈண்டு, 'கூற்று' என்பது 'சொல்' என்னும் பொருளைத் தருகிறது. அக இலக்கியங்களில் தலைவன் கூற்று, தலைவி கூற்று, செவிலி கூற்று, தோழி கூற்று என்று வரும் இடங்களிலெல்லாம் 'கூற்று' என்பது 'சொல்' என்னும் பொருளிலேயே வருகிறது. அப்பரடிகள், இப்பாடலில், "கூற்று ஆயினவாறு" என்று கூறுவது எந்தக் கூற்றை-அதாவது சொல்லை என்று சிந்திப்பது அவசியம். மண்ணுலகில் அவதரித்தற்கு முன்னே அவர் விண்ணுலகில் வாகீசமுனிவராக வாழ்ந்தார். இதற்குச் சான்றாகச் சேக்கிழார் சுவாமிகள் அருளியபாடல் ஒன்று உள்ளது. தமக்கையார் திலகவதியார் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த சிவபெருமான் அவர் கனவில் அருளுவதாக உள்ள பாடல் அது. "முன்னமே முனியாகி எமை அடையத் தவமுயன்றான்" அன்னவனை இனிச் சூலைமடுத்தாள்வம் என்று சேக்கிழார் கூறுகிறார்.

மறைமுக உதவி :

திருக்கயிலை மலையை இராவணன் பெயர்க்க முயன்றபோது, சிவபெருமான் தம் திருவடி விரலால் அவனைச் சிறிதே அழுத்தினார். அவன் துன்பம் தாளாமல் அழுதான்; அங்குத் தவம்செய்து கொண்டிருந்த வாகீச முனிவர் அவன் மீது இரக்கங்கொண்டு அவன் உணரும் வண்ணம், "இறைவன் சாமகானப்பிரியன்" என்று மறைமுகமாக உதவிபுரிந்தார். இராவணன் இதனைக்கேட்ட உடன், தலை ஒன்றையும் கையில் உள்ள நரம்பையும் எடுத்து வீணை அமைத்துச் சாமகானம்பாடி நாளும், வாளும் இறைவனிடம் பெற்றுக் கொள்கிறான். இறைவன் அவனுக்கு அருளைவழங்கி,

வாகீச முனிவருக்கு மண்ணில் பிறந்து அவன் அடைய வேண்டிய அத்துன்பத்தை அடையுமாறு திருஉள்ளம் பற்றினர். இந் நினைவை நெஞ்சத்தில் வைத்தே, திருவதிகைத் திருக்கோயில் சந்நிதியில் தமக்கையார் துணையும் இறைவனின் திருவருளும் கைகூடிவர, அப்பர் சுவாமிகள் முதல் பதிகமாக "கூற்றாயினவாறு விலக்ககிலீர் என நீடிய கோதில் திருப்பதிகம்" பாடினர்.

கூற்று ஆயினவாறு என்பதற்குத் தாம் முன்பு கயிலையில் கொடிய செயல்புரிந்த இராவணனுக்கு சாமகானப்பிரியன் என்ற சொல்லால் மறைமுகமாக உதவிய சொல் எனக்கு இப்போது சூலை நோயாக வந்து வருத்துகிறது என்பது பொருளாகிறது. துட்டனுக்குத் துணைசெய்தால் அவன் அனுபவிக்க வேண்டிய துன்பத்தைத் துணைசெய்யப் போனவன் அனுபவிக்கவேண்டும் என்பது சாத்திரம். எனவே இங்கு, தான் பெறுகின்ற துன்பங்களுக் கெல்லாம் காரணம் அந்தக் கூற்றே. அதாவது அந்தச் சொல்லே என்பாராக, "கூற்று ஆயினவாறு விலக்ககிலீர்" என்றுபாடுகிறார். இங்கு, "உரையினில் வந்த பாவம்" என்ற திருஞானசம்பந்தர் வாக்கும்,

"அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்"

என்ற குருஞானசம்பந்தர் வாக்கும் நினைவு கூரத்தக்கன.

இப்பதிகத்தின் இரண்டாவது பாடலில், "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாதொரு போதும் இருந்தறியேன்" என்றும், ஆறுவது பாடலில்,

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என் நாவில் மறந்தறியேன்"

என்றும் அப்பரடிகள் பாடியுள்ளார். சமணசமயத்தில் பல்லாண்டு கள் வாழ்ந்தவர் அப்பரடிகள். அங்ஙனம் இருக்கும்போது "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்" என்றும் "நினையாது ஒருபோதும் இருந்தறியேன்" என்றும் "சலம் பூவோடு தூபம் மறந்தறியேன்" என்றும் கூறலாமா? கூறுவது எப்படிப் பொருந்தும்? என்று பலரும் கேட்கின்றனர். இது குறித்த தெளிவினைத் தருமைக் குருமணி அவர்கள் முதல்ஞாயிறு தோறும் நிகழ்த்தி வரும் அருளுரையில் ஒருமுறை விளக்கினார்கள். அக்குறிப்பைக் கீழே தருகிறோம்.

"திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்ப உருவாரப் பூசிய மருள்நீக்கியார் வீரட்டானேசுவரர் சந்நிதியில் பணிந்து எழுந்தார். இறையருளால் பாடும் உணர்வு தோன்றக் "கூற்றாயினவாறு" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். அதில் வீரட்டானத்து உறை அம்மானே அடியேன் முன்பு கயிலையில் இராவணனுக்கு உதவியாகக்கூறிய கூற்றினால் உண்டாகிய வயிற்று வலியை விலக்காது இருக்கின்றீரே! நான் பல கொடுமைகளைச் செய்திருப்பேன் ஆனால் அவற்றை அறிந்து செய்தேன் இல்லை. எப்படியோ என்னை இப்போது உன்திருவடிப் பணியாளனாய் ஏற்றுக்கொண்டாய், இந்நிலையில் இனி நான் இரவும் பகலும் எப்பொழுதும் இடைவிடாமல் உன்னை இனி வணங்குவன் என்கிறார் அப்பரடிகள்.

தவறுடைய என்னை நின் கருணையினால் மன்னித்து ஏற்றாய் என்று இறந்த காலத்தால் பெருமான் ஏற்றமையைக் கூறி ஏற்றமையால் தெளிவு பெற்ற நான் இனி வணங்குவன் என்று எதிர்காலத்தால் முதல் பாடலில்தான் அப்பர்கூறி இருக்கின்றார். ஆனாகிய பிறகு அடுத்து இரண்டாம் பாடல், ஆறும் பாடல்களில் தான் இறந்த காலத்தில் கூறியுள்ளார். எனவே இதில் குழப்பத் திற்கு இடமே இல்லை. நாம் சரியாகப் படிக்காததுதான் குறை. என்பது குருமணியின் விளக்கம்.

எனவே சைவமெய்யன்பர்கள் அப்பர் அடிகள் குருபூஜை விழாவினை ஆங்காங்கே ஒல்லும் வகையெல்லாம் தம்இல்லத்திலும் திருக்கோவில்களிலும் கொண்டாடுவதுடன் அவர் அவதாரத் தலமாகிய திருவாமூரிலும் அவர் அருள்பெற்ற திருவதிகை வீரட்டானத்திலும் அவர் முக்திப் பேறெய்திய திருப்புகலூரிலும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்ற குருபூஜைப் பெருவிழாவில் பங்குகொண்டு பணிந்து பணியாற்றிச் சிறப்புறுவார்களாக!

அப்பர் காட்டிக் கொடுத்த உழவாரப் பணியினை இந்தப் புனித நாளிலாவது திருக்கோயில்களில் செய்து புனிதம் அடைவோமாக. மேலும் அப்பர் வரலாற்றைக் கூறும் பெரிய புராணப் பாடல் (429) நானூற்று இருபத்தொன்பதையும் முற்றும் ஓதி முதன்மைபெறுவோமாக. அப்பர் அருளிய தேவாரப் பாடல்கள் மூவாயிரத்து அறுபத்திரண்டு பாடல்களையும் முழுவதும் ஓதி முழுநலம் அடைவோமாக.

அப்பரைப் பணிவோம்!

அருளினைப் பெறுவோம்!

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவு நினைவாக,

காசியில் 8, 9, 10—12—88 இல் நடைபெற்ற

அனைத்துலக சைவசித்தாந்த மூன்றுவது கருத்தரங்கின் விழாமலருக்கு

வழங்கியருளிய

ஆசியுரை

" மறையே நமது பிடிகையாம் மறையே நமது பாதுகையாம்
மறையே நமது வாகனமாம் மறையே நமது நூபுரமாம்
மறையே நமது கோவணமாம் மறையே நமது விழியாகும்
மறையே நமது மொழியாகும் மறையே நமது வடிவாகும்."

— பரஞ்சோதி முனிவர்

வேதம் :

அருளாளர்கள் அனைவரும் முதல் நூலாகவும், முனைவன் நூலாகவும் குறித்துப் போற்றுவது வேதம் ஆகும்.

" நன்று ஆய்ந்த நீள்நிமிர் சடை
முது முதல்வன் வாய் போகாது
ஒன்று புரிந்த ஈர் இரண்டின்
ஆறு உணர்ந்த ஒரு முதுநூல் "

எனப் புறநானூறு கூறும். இவ்வேதம் அந்தணர்களால் பெரிதும் ஓதப்பெறும் சிறப்புடையது.

" அந்தனர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் "

" ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனில் "

என்னும் திருக்குறளும்.

இவ்வேதம் நான்கு கூறுகளையுடையது. ஆதலின் நான்மறை என நவிலப்படுவது.

பொதுவும் சிறப்பும்:

வேதத்துள் கூறப்படாத பொருள்களே இல்லை என்பர்.

" வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தின்
ஓதத் தகும் அறம் எல்லாமுள தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே "

என்னும் திருமந்திரம். இவ்வாற்றான்வேதம் அனைத்து மக்களுக்கும் உரிய அறங்கள் பலவற்றையும் கூறுவது என்பது புலனாகின்றது. இதனால் இதனைப் பொதுநூல் என அழைக்கலாயினர். இப்பொது நூலினின்றும் ஒழுக்கநெறியினும், தெய்வ வழிபாட்டு நெறியினும் சிறப்பாகச் சொள்ளத்தக்க நெறிகளைக் கூறுவனவே ஆகமங்களாகும். ஈண்டுச் சிறப்பென்பது ஒழுக்கநெறியினும் வழிபடும் தெய்வநெறியினும் ஆம் என்பது அறியத்தக்கது. இவ்வாற்றான் இதனைச் சிறப்பு நூல் என மொழிந்தனர் சான்றோர். இவ்வாகமங்களை அருளியவனும் முதல்வன் எனத்தகும் சிவபெருமானே யாவன்,

" மன்னு மாமலை மகேந்திர மதனில்
சொன்ன ஆகமம் தோற்று வித்தருளியும் ..."

" மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்ற ஐம்முகங்களால் பணித் தருளியும் "

" தெள்ளும் வாய்மையின் ஆகமத் திறனெலாந் தெரிய
உள்ளவாறு கேட்டருளினள் உலகை ஆளுடையாள் "

எனவரும் திருநெறிய தீந்தமிழ்மறைகளால் இவ்வுண்மை புலனாகும்.

இவ்வாற்றான் பொது நூலென்பது பெரிதும் உலகியல் அறங்கள் தழைய நிற்பது என்பதும், சிறப்புநூல் என்பது அருளியல் அறங்கள் தழைய நிற்பது என்பதும் புலனாகும்.

அருளியல் நெறியில் மீதூர்ந்தநெறி சைவசமயமேயாகும். காரணம், பிறர் பிறர் கூறும் அறிவியல் கூறுகளையும், ஆன்மீகநெறிகளையும் தத்தம் படிமுறையில் வைத்து அவற்றையும் ஏற்று அரவணைத்துச் செல்லும் பாங்கு இதற்கு அமைந்திருப்பதேயாகும். இக்கருத்தாலேயே,

" வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுமுள நூல்இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதி அமலன் தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொது; சைவம் அருஞ்சிறப்புநூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்த மாகும் "

எனச் சிவஞான சித்தியாரும் கூறுவதாயிற்று.

சாரம் கொண்ட சைவசித்தாந்தம்:

இவ்வாறு இறைவனை முதன்மையாகக் கொண்டு எழுந்த வேதாகமங்களின் பிழிவே (சாரம்) சைவசித்தாந்தம் ஆகும் என்பதைக் குமரகுருபரரும் மிகத்தெளிவாகக் கூறுவர்.

" குடிலை யென்னுந் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதவம் வளர்த்தனை
பாதவ மதனிற் படுபயன்பலவே, அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே, யிலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே, தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விருப்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வாறு றுப்பு மிவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே "

என்பது அம்முனிவரின் திருவாக்காகும். இவ்வாறு உருவகித்ததன் வாயிலாகக் கனியின் பிழிவாக விளங்குவது சைவசித்தாந்தம் எனத்தெரியினும், அப்பிழிவைப் பெறுதற்கு அடிநிலையாக நின்றது வேதம் என்பதும் அதன்வழி விரிந்தனவே பல்சமயக் கூறுகள்

என்பதும் புலனாகின்றன. அன்றியும் இவ்வேதமென்பது, பல்லுயிர்க்கும் பொதுவான பல்வேறு அறங்களைக் கொண்டது என்பதும் புலனாகின்றது.

இக்கருத்தையே பிறிதொரு நிலையில்,

"வேதம் பசு அதன்பால் மெய் ஆகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளுறு நெய் — போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய்மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் திறம்."

எனப்பழம்பாடல் ஒன்றும் உருவகித்து விளக்குகிறது. 'இராசாங்க சமயம்' எனத் தாயுமானர் குறிப்பதும் இக்கருத்தினலாம் என்பதும் விளங்கத்தக்கதாம்.

வாழ்த்து :

இத்தகைய சீர்மைக்கும், சிறப்பிற்கும் ஏதுவாய சைவ சித்தாந்தச் செந்நெறியினை' ஏனைய பிறசமயங்களோடு ஒப்பிட்டு ஆராய்தற்கும் அதன்வழிச் சைவசித்தாந்தத்தின் சிறப்பினை அறிந்து அதனைக் கடைப்பிடித்தற்குமாக நிறுவப்பட்டதே நம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமாகும். "உலகம் தழீஇயது ஒட்பம்" என்பதற்கேற்ப உலகம் தழுவிய நிலையில் ஏற்கனவே, இருமாநாடுகளை நடத்தி இம்மூன்றாவது மாநாட்டினைக் காசியில் நடத்தத் திருவருள் கூட்டுவித்தருளியுள்ளது. அதுவும், நம் ஆதீன நான்காவது குருமூர்த்திகளின் அருள்பெற்றுத் தவவேடம் பூண்டு அக்குருமூர்த்திகளின் ஆணையின் வண்ணம் துறவரசராய்க் காசி வரையிலுஞ் சென்று சைவசித்தாந்தச் செந்நெறியினைப் பரவச்செய்த குமரகுருபர முனிவரின் முந்நூறாவது ஆண்டு விழாவின் நினைவாக நிகழவிருப்பது மேலும் மகிழ்தற்குரிய திருவருட்கொடையாகும்.

இவ்விழாச் சிறக்கத் துணைநிற்கும் நம்கண்மணியிற் சிறந்த நன்மணியாகிய காசிவாசி கயிலை மாமுனிவருக்குச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் முன்னின்று அருளுவதாகுக. இவ்விழாவினையொட்டி வெளிவரும் இம்மலர் சிறக்கவும், நமது நிறுவனத்தோடு தொடர்புகொண்டு இவ்விழாவினை நடத்தும் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களும், மற்றும் இதில் பங்குபெறும் அறிஞர்களும், பயன்பெறும் அன்பர்களும் எல்லா நலன்களும் பெற்று உய்யவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க உலகெலாம்!

கட்டுரை எண். 15.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

கேள்வி ஒன்று :

சிவஞானசித்தியாரில், இறைவன் குலாலனுய் நின்று, மாயையை மண்ணுகக் கொண்டு, தனது சக்தியைச் சக்கரமாக அமைத்து இவ்வுலகைத் தோற்றுவிக்கிறுன் என்னும் செய்தி பொதுவாக முன்னர்ச் சிந்திக்கப்பெற்றது. இதுபொழுது, தனியாக (சிறப்பாக) இறைவன் சக்தியைச் சக்கரமாகக்கொண்ட முறைமை வகுத்துக் கூறப்படுகிறது.

குயவன் சக்கரத்தைப் பற்றி நின்று குடத்தைத் தோற்றுவிப்பன். அங்ஙனமாக இறைவன் எங்ஙனம் சக்தியைப் பொருந்தி நின்று உலகைத் தோற்றுவிக்கிறுன் என்னும் கேள்வியினை ஆசிரியர் முதலில் எடுத்துக் கொள்கிறுர்.

" மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலால ஞலே
எண்ணிய உருவம் எல்லாம் இயற்றுவன்ஈசன் தானும்
கண்ணுகா ரியங்க ளெல்லாங் காரணம்அதனிற் காண்பனி
பண்ணுவது எங்கே நின்றிங் கென்றிடிற் பகரக் கேள்வி "

என்னும் பாடலில் மேற்காணும் கேள்வி புலப்படுகிறது.

பிரிவின்றி நிற்கும் பெருமை :

இதற்கு விடை சொல்ல வந்த ஆசிரியர் ஓர் உவமையினைக் கையாள்கிறுர். காலம் என்பது சடப்பொருள். அது சிவசக்தியால் அதிட்டிக்கப்பட்டு நின்று, உலகைக் காரியப்படுத்துகிறது. இந்நிலையில் சிவசக்தி நிமித்தகாரணமாகிறது; காலம் துணைக்காரணமாகிறது. இவையிரண்டும் பிரிவின்றியே நின்று உலகைக் காரியப்படுத்துகிறது அது போலவே இறைவனும் சக்தியோடு பிரிவின்றி நின்று உலகைத் தோற்றுவிக்கிறுன்.

" சிலமோ உலகம் போலத் தெரிப்பரிது அதனால் நிற்குங்
கோலமும் அறிவா ரில்லை ஆயினும் கூறக் கேள் நீ
ஞாலம் ஏழினையுந் தந்து நிறுத்திப்பின் நாசம் பண்ணும்
காலமே போலக் கொள்நீ நிலைசெயல் கடவுட் கண்ணே "

என்னும் பாடலில் மேற்சொன்ன விளக்கம் உள்ளது.

விகாரம் பெறுத விந்தை :

சிவன் சக்தியோடு பொருந்தி நின்று உலகைத் தோற்று விக்கிறான் எனில் அப்பொழுது விகாரம் அடைவானே என்னும் வினாவை எழுப்பிக் கொண்டு அடுத்த பாடலில் விடை தருகின்றார் இவ்விடையைக் கூறும்பொழுது ஆசிரியர் சிறந்த உவமை ஒன்றைப் பயன்படுத்துகிறார். உயிரானது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளையும் உறும் என்றும், அப்பொழுது கருவிகளோடு கூடியிருக்கும் என்றும் ஐந்தவத்தைகள் பட்டு, கருவிகள் நீங்கியகேவல நிலையை (தனித்த நிலை) உயிர் பெறும்பொழுது தான் மாத்திரமே நிற்கும் என்றும் கூறுவர். இது போல இறைவனானவன் சிவம், சக்தி, சதாசிவன், மகேசுவரன், சுத்தவித்தை என்னும் ஐந்தோடும் பொருந்தி நின்று காரியமாற்றிவிட்டுப் பிரிந்த நிலையில் தனித்து விகாரமின்றி இருப்பன் என்பது கருத்து. எனவே சக்தியுடன் பொருந்தியிருந்து பின் நீங்கிய நிலையில் விகாரம் அடையான் என்பது விடை ஆகும். இவ்விடைப் பொருளைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

" கற்றநூற் பொருளும் சொல்லும் கருத்தினில் அடங்கித் [தோன்றும்
பெற்றியும் சாக்கி ராதி உயிரினில் பிறந்து ஒடுக்கம்
உற்றதும் போல எல்லா உலகமும் உதித்து ஒடுங்கப்
பற்றொடு பற்றது இன்றி நின்றனன் பரனும் அன்றே "

இதுவரை சித்தியாரில் முதற் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரணத்தின் முதல் பிரிவுச் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. இனி இரண்டாம் பிரிவுச் செய்திகளைச் சிந்திக்கலாம்.

ஒடுங்குவதும் தோன்றுவதும் ஏன்?

உயிர்கள் மகாசங்கார காலத்தில் இறைவனிடத்து ஒடுங்கும் என்றும் அவ்வுயிர்களின் ஆணவமலம் பக்குவம் பெறல் பொருட்டு இறைவனே உயிர்களை மீண்டும் தோற்றுவிக்கிறான் என்றும் ஆசிரியர் அடுத்த பாடலில் விளக்குகிறார். ஒடுங்கும் பொழுது உயிர்கள் இறைவனிடத்தும் உடம்பு முதலாய காரியங்கள்

மாயையிடத்தும் ஒடுங்குமென அறிதல் அவசியம். அம்மாயை சக்தியிடத்தும், சக்தி அரனிடத்தும் முடிவாக ஒடுங்கும் என்பதனையும் அறிதல் வேண்டும்.

"உயிரவை ஒடுங்கிப் பின்னும் உதிப்பதுஎன் அரன்பால் என்னில்
செயிருறும் மலத்தினுகும் சிதைந்துஏது என்னில் சித்தத்து
அயர்வு ஒழி காரியங்கள் அழியும் காரணம் கிடக்கும்
பயில்தரு காரியம் பின் பண்டுபோல் பண்ணும் ஈசன்"

என்பது அக்கருத்தமைந்த பாடல்.

சூரியனும் இறைவனும் :

இறைவன்இங்ஙனம்உலகைப்படைத்தும், காத்தும், அழித்தும் செய்கிற செயல்களால் அவன் விகாரத்தைப் பெறுவான் என்று பிறர் கூறும் தடைக்கு உரிய விடையினை அடுத்த பாடலில் தருகிருர். இவ்விடையினைத்தர வரும்பொழுது வழக்கமாகத் தேர்ந்த உவமை ஒன்றினை எடுத்து ஆளுகின்றுர் ஆசிரியர்.

சூரியனின் சந்நிதானத்தில் சூரிய காந்தக் கல்லிலிருந்து நெருப்புத் தோன்றலும், தாமரை மலர்தலும், நீர்வற்றலும் ஆகிய முத்தொழில்களும் நிகழ்கின்றன. இவற்றை இங்ஙனம் நிகழ்த்தினும் சூரியன் எந்தவிதமான விகாரத்தையும் எய்தவில்லை. அதுபோல இறைவனின் சந்நிதானத்தில் உலகின் தோற்றமும், காத்தலும், அழித்தலும் ஆகிய முத்தொழில்களும் நடைபெற்ற போதினும் இறைவன் விகாரம் அடையான். ஈண்டு, நெருப்புத் தோன்றல்-படைத்தலுக்கும்; தாமரை மலர்தல்-காத்தலுக்கும், நீர்வற்றல்- அழித்தலுக்கும் பொருத்தமாக அமைந்துள்ளமையை எண்ணி மகிழலாம். இத்தகைய சிறந்த கருத்துக்கள் அமைந்த பாடல் கீழ்வருமாறு :-

"தோற்றுவித்து அளித்துப் பின்னும்துடைத்து அருள்தொழில்கள் [மூன்றும்
போற்றவே உடையன் ஈசன் புகுந்தது விகாரம் என்னில்
சாற்றிய கதிரோன் நிற்கத் தாமரை அலரும் காந்தம்
காற்றிடும் கனலை நீருங் கரந்திடும் காசினிக்கே"

உரிமை உடைய ஒருவன் :

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்தற்கு அயன், அரி, அரன் என்னும் மூவரும் உரியர் என பௌராணிகர் கூறுவது இருக்க, இங்கு இறைவனுகிய அரனே அனைத்தையும் செய்கிருன் என்று கூறுவது எங்ஙனம்பொருந்தும்? என்னும் வினவை எழுப்பிக்கொண்டு ஆசிரியர் அடுத்து விடை தருகிருர். அயன், அரி இருவரும் முன்செய்த புண்ணியப் பயனல்

அரனது அதிகார சக்தியைப் பெற்றுத் தத்தம் தொழில்களைச் செய்கிறார்களே அன்றி அத்தொழில்களுக்கு அவர்கள் முழு உரிமை உடையவர்கள் அல்லர். உரிமை அனைத்தையும் உடையவன் அரனாகிய இறைவனே ஆவன்.

"உரைத்த இத்தொழில்கள் மூன்று மூவருக்கு உலகம் ஓத
வரைத்த ஒருவனுக்கே ஆக்கி வைத்ததுஇங்கு என்னையென்னின்
விரைக் கமலத்தோன் மாலும் ஏவலான் மேவினோர்கள்
புரைத்து அதிகார சத்தி புண்ணிய நண்ண லாலே."

என்னும் இப்பாடல் அவ்விளக்கத்தைத் தருகிறது. (தொடரும்)

கடிதம்

குத்தாலம் பாலு, குத்தாலம்,
'தினமணி' செய்தியாளர், 8—4—1989.

எல்லாம்வல்ல அருள்மிகு சொக்கநாதப்பெருமான் திருவருளையும், அருள்மிகு குருஞானசம்பந்தரின் குருவருளையும் தன்னகத்தே கொண்டு ஞானச்செங்கோல் ஏற்று அருளாட்சி செய்துவரும் தருமையின் ஞானவேந்தராகிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிகட்குப் பெருவணக்கம்.

ஆங்கில மாத முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வழங்கியருளும் பெரியபுராண அருளுரைகளை ஞானசம்பந்தம் இதழ் வாயிலாகப் படித்துப் பயன் எய்தி வருபவர்களில் அடியேனும் ஒருவன்.

இம்மாத இதழில் அன்பர் திரு. கா. ம. கண்ணப்பன் அவ்வருளுரையை அழகுறத் தொகுத்தளித்திருந்ததைப் படித்து மிகவும் பரவசமானேன். 'பொத்தில் ஆந்தைகள் பாட்டறாப் புனவாயிலே' என்ற தேவாரத்திற்கு மகாசந்நிதானம் வழங்கியருளிய விளக்கம் மிக அற்புதம். திருப்பாதாளீச்சரம் வழிபாட்டுக்குச் சென்று திரும்பி, சுந்தரரும் சேரமானும் திருக்கோயில் சென்றனர் என்ற பகுதியில் ஞானசம்பந்தர் காட்டிய நெறியையே சுந்தரரும் பின்பற்றினர் என்பது அருமையான ஒப்பீடு. சுந்தரருக்குச் சேரமான் கவரி வீசியது போலச் சேக்கிழாருக்குச் சோழமன்னன் கவரிவீசினான் என்ற ஒப்பீட்டுக்கு ஈடுஇணை இல்லை.

பெருந்தவத்தின் பயனாய்த் தமிழகத்துக்குக் கிடைத்த மகாசந்நிதானம் அவர்களைப் போற்றிப் பயன் கொள்ளல் தமிழ் மக்களின் தலையாய கடன்களில் ஒன்றாகும்.

சைவ உணவு உண்பவர்களுக்குப் பொறுமை, ஆயுள் அதிகம்

புது தில்லி, மார்ச் 19 சைவ உணவு உண்பவர்களை விட (விஜிடேரியன்) அசைவ உணவு சாப்பிடுபவர்கள் (நான் - விஜிடேரியன்) அதிக வீரத்துடனும், கோபம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள் என்றும், சைவ உணவு உண்பவர்கள் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ்வார்கள் என்றும் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

மேலும், சைவ உணவு உண்பவர்கள் அசைவக்காரர்களை விட மும்மடங்கு பொறுமை மிக்கவர்கள். புற்றுநோய், இருதய நோய்கள் அதிகம் பாதிக்காது. குழந்தை பெறும் தன்மை அதிகம் கொண்டவர்கள். மனித உடல் அசைவ உணவுக்கு ஏற்றதல்ல என்பது இந்த ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

குவாலியர் மத்திய சிறைச் சாலையில் சுமார் 400 கைதிகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. அசைவ உணவு சாப்பிடும் 250 கைதிகளில் கிட்டத்தட்ட 85 சதத்தினர் எரிச்சலடைபவர்களாகவும், முர்க்கத்தனமாகவும் இருந்தனர். சைவ உணவு உண்பவர்களில் கிட்டத்தட்ட 90 சதத்தினர் பொறுமையாகவும் சாந்தமான குண முடையவர்களாகவும் இருந்தனர்.

இந்தக் குணநலன்கள் இரத்தத்தில் உள்ள பல்வேறு சத்துக் களைப் பொறுத்துள்ளது என்றும், இது மூளையின் திறனைப் பாதிக்கிறதுஎன்றும், ஆய்வாளர்கள டாக்டர் ஜாஸ்ராஜ்சிங் மற்றும் சி. கே. தாபஸ் ஆகியோர் தெரிவித்தனர்.

வனவிலங்குகள் பற்றிய ஆய்வும் இதையே நிருபிக்கிறது. மாமிசம் உண்ணும் சிங்கப், நாய், பூனை போன்றவை கடுமையான பசி ஏற்பட்டால் தங்களது குட்டிகளையே தின்றுவிடும். ஆனால், குதிரை, யானை போன்ற சைவ உணவு உண்ணும் பிராணிகள் அவ்வாறு செய்யாது.

90 முதல் 110 வயதுள்ள ஹன்சா பழங்குடியினர் பற்றி நடத்தப்பட்ட ஆய்வில் அந்த முதிய வயதிலும் அவர்களுக்கு வழக்கமான ரத்த அழுத்தமும், கொழுப்புச் சத்தும் உள்ளது தெரியவந்தது. இவற்றுக்கு முக்கிய காரணம் அவர்களது அசைவ உணவே ஆகும்.

எனினும், கடுமையான சைவ உணவு உண்பதால் வைட்டமின் 12 மற்றும் சில புரோட்டீன்கள் சத்துக்கள் குறைவுக்குக் காரணமாகலாம் என்று சில டாக்டர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இதை இந்த ஆராய்ச்சியாளர்கள் மறுக்கின்றனர். அசைவ உணவு ஆதரவாளர்கள், நமது உடலின் புரோட்டீன் தேவையை மிகைப்படுத்திக் கூறுகிறார்கள் என்று இவர்கள் தெரிவிக்கின்றனர். அசைவ உணவால் கிடைக்கும் உபரியான புரோட்டீன்கள் பயனற்றவை மட்டுமல்லாமல், சிறுநீரகத்தையும் நுரையீரலையும் பாதிக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

— நன்றி. தினமணி (மதுரை)]20—3—89.

கடிதம்

எஸ். செல்வவினாயகம் மதுரை - 625006

5—4—1989.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பாதார விந்தங்களை கரம் கூப்பி வணங்குகிறேன்.

இம்மாத முதல் ஞாயிறு (2—4—89) அன்று திருமடத்திற்கு நேரில் வந்து, ஆதீனகர்த்தரின் ஆசியைப்பெற்றதும், அரியதொரு சொற்பொழிவைச் செவியுற்றதும், பெறுதற்கரியபேறுக நினைந்து, பெருமகிழ்வடைகிறேன். ஆசி பெற வந்த, என் துணைவி திருமதி. சிதம்பரவடிவை பெரும் ஓதுவார்களினிடையே, திருமுறை ஓத அனுமதித்ததும், அவள் பாடிய கோயில் பதிகத்தின் ஒரு அடியை (நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்) அன்றைய சொற்பொழிவின் முக்கிய அம்சமாக வைத்து, இறைவனை அடைவதற்கான நெறிமுறைகளை வெகு தெளிவாக விளக்கியதும், வருகை புரிந்த மெய்யன்பர்கள் அனைவரையும் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தி, இன்புறவைத்தது. என்றென்றும் உள்ளத்தில் பதியவைத்தது. புலமைக் கடலிலிருந்து ஊற்றெடுத்த ஊற்றுக்களை, தலைசிறந்த கருத்துக்குவியல்களை எத்தனை நூல்களைப் படித்தாலும், புரிந்து அறிய இயலாது. இனிவரும் ஒவ்வொரு மாத முதல் ஞாயிறும், ஆதீனத்துக்கு வந்து, இப்பெரும் பயனைப் பெற திருவருள் கூட்டி வைக்கவேண்டும்.

உ

குருபாதம்

தருமை ஆதீனம்

ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா

தருமை ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழா

சிறப்புத் திருநாள் விபரம்

சுக்கில ஆண்டு - வைகாசித் திங்கள்

தமிழ்த் தேதி	ஆங்கிலத் தேதி	கிழமை	சிறப்புத் திருநாள்
4	17-5-89	புதன்	கொடியேற்றம்
8	21-5-89	ஞாயிறு	சகோபுர ரிஷபவாகனக் காட்சி
10	23-5-89	செவ்வாய்	திருக்கல்யாண விழா
12	25-5-89	வியாழன்	திருத்தேர்
13	26-5-89	வெள்ளி	ஸ்ரீலஸ்ரீ ஆதி குருஞானசம்பந்தர் குருபூசை விழா, மாகேசுவர பூசை.
14	27-5-89	சனி	காலை : சிவபூசை நண்பகல் : மாகேசுவரபூசை இரவு : தருமை ஆதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பட்டினப்பிரவேசம்.

விழா நாட்களில் காலை மாலை ஆகிய இருவேளைகளிலும் திருவீதியுலாக் காட்சியும், மாலை ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் விரிவுரைகளும் நடைபெறும். திருவீதியுலாவின் போது வேத பாராயணமும் திருமுறைப் பாராயணமும் நிகழும்.

பக்தர்கள் விழாவில் கலந்துகொண்டு திருவருளும் குருவருளும் பெற்று உய்வார்களாக.

கர்நாடக இசையில் கமகம்

திரு. P. T. R. கமலத்தியாகராஜன்

மதுரை.

(மலர் 48, இதழ் 4, பக்கம் 186 இன் தொடர்ச்சி.)

விபுலாநந்தரின் கணித ஆற்றலை கண்டு நாம் மகிழலாம், வியக்கலாம். ஆனால் நடைமுறையில் ஆயிரம் நரம்புகளுக்கு ஸ்ருதி கூட்டி அக் கருவியில் கர்நாடக இசை வாசித்தல் அரிதினும் அரிது. ஆகையால் நம்மிசைக்கே உரித்தான சில கமகங்கள் வாசிக்க முடியாது என்ற காரணத்திற்காக மட்டுமல்ல, இத்தனை வேறுபாடுகள் உள்ள நால்வகை யாழ்களை ஒருமைப்படுத்தி ஒரே யாழ் செய்ய முடியாத காரணத்தினாலும், யாழ், நம் இசைக்கு ஒவ்வாத கருவியாகக் கருதிக் கைவிடப்பட்டது.

மேனாட்டிலும் இதே நிலையிருந்தது. ஆனால் அவர்கள் பலதரப் பட்ட யாழ்க்கருவிகளுக்கு (Harps) பதிலாக, அதே அடிப்படையில் 'Harpsichord'' என்ற ஒரு கருவியைச் செய்து, அந்தக் கருவியின் பரிணாமவளர்ச்சியாக "Piano'' என்ற கருவியைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் 12 ஸ்ருதிகளை மட்டும் எடுத்துக் கொண்டார்கள், ஆனால் நாம் முன் கூறிய "Major Scale" என்ற மேளத்தின் ஸ்ருதி அடைவை முற்றிலும் மாற்றிவிட்டார்கள். கிளை, நட்பு என்ற அடிப்படையில் கிடைத்த 12 ஸ்வரங்களின் அதிர்வு எண்களை (Frequencies) மாற்றி ஒரு ஸ்வரத்திற்கும் அதன்கீழ் உள்ள ஸ்வரத்திற்கும் உள்ள அதிர்வு விகிதத்தை (Frequency Ratio) ஒரே சமனாக (Constant) செய்து விட்டார்கள். இசையடிப்படையில் கிடைத்த மேளத்தை "Just Intonation Scale'' என்றும் புதிதாக அவர்கள் உருவாக்கிய மேளத்திற்கு "Equal Temperament Scale" என்றும் பெயரிட்டார்கள். இம்மாற்றத்தினால் தாரக்கிரமம், குரற் கிரமம், இளிக்கிரமம் என்ற வேறுபாட்டை அவர்கள் அழித்து விட்டார்கள். இந்த மாற்றத்தில் ஒரு பெருங்குறையுண்டு. கிளை - நட்பு அல்லது வாதி - ஸமவாதி அடிப்படையில் உள்ள ஸ்வரங் களின் அதிர்வெண்கள் அவை நிற்க வேண்டிய நிலையினின்றும் மாறுபட்டு நிற்பன. உதாரணமாக G(ப) என்ற கிளை ஸ்வரத் துத்திம், C(ஸ) என்ற ஆதார ஸ்வரத்திற்கும் இசையியலின்படி

அதிர்வெண் விகிதம் (Frequency Ratio) சரியாக 1.5 ஆக இருக்க வேண்டும்.

ஆனால் "Equal Temperament" என்ற மேளத்தில் இது 1. 498 ஆக உள்ளது. "Major Scale" அல்லது சங்கராபரண மேளத்தில் ஸ்வரங்களின் அதிர்வு விகிதங்கள் உண்மையான "Just Intonation" மேளத்திலும், "Equal Temperament" மேளத்திலும் இங்கே குறிப்பிடுவோம். க, ம, த, நி ஆகிய ஸ்வரங்கள் ஸ்ருதி அதிகமாக ஒலிக்கின்றன. ரி, ப குறைந்து ஒலிக்கின்றன.

இந்த உபாயத்தை கி. மு. 4 ஆம் நூற்றாண்டில் Aristoxenus என்பவர் கூறியதாக ஒரு கருத்து இருந்தபோதிலும், அது திட்ட வட்டமாக உண்மையெனத் தெரியவில்லை. Zarlind கி. பி. 1588 இல் இந்தயுக்தியை வற்புறுத்தியதாகத் தெரிகிறது. பிரபல இசைப் புலவர் Bach (1685-1750) இந்த மேளத்தின் அடிப்படையில் பல அரிய இசைப்படைப்புக்களைத் தந்திருக்கிருர். ஆனுல் மிக அண்மைக் காலம் வரை இந்தப் புது மேளத்தைப் பலபெரியார்கள் கடுமையாக எதிர்த்தனர். 1875 ஆம் ஆண்டில் கூட ஒரு பேராசிரியர் ''இந்த மேளம் நம் இசைக்கேற்றதல்ல, இவை இத்தனை நாள் நாம்கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்ருல், நாளடைவில் நம் செவிகளின் இசை யுணர்வு கெட்டுவிட்டது என்று தான் கூற வேண்டும்.'' என்று மனம் நொந்து கூறினர். மாற்றுக் கருத்துடையோர்கள் கூறும் சமாதானத்தை ஒரு சிறந்த நூலாசிரியர் வாயிலாக ஆங்கிலத்தில் கேட்போம்.

"An ideally tuned scale is as much of a dream as a philosophers stone...——...–the scale as we now have it is as perfect as our system requires. It has afforded bach, beethoven, schubert, wagner and brahms ample opportunities to produtce works which in their respective lines are as wonderful as it is conceivable for any art" மேற்படி கூறியது Sir Hubert parry (1848-1918) 72 மேளங்களுக்கு எதிர்ப்புத் தோன்றியபோது, இசையியலின் அடிப்படையில் மட்டும் பதில் கூருது பெரிய சங்கீத மேதைகள் இதை ஏற்றுக்கொண்டார்கள் என்று கூறித் தமிழிசை இவற்றை ஏற்றுக்கொண்டது போல் (Equal Temperament) "சம அதிர்வு விகித" மேளத்தை மேனுட்டு இசை வல்லுனர் இப்போது ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

இந்த மேளத்தின் அடிப்படையில் Harpsichord, Piano என்ற கருவிகள் தோன்றியதன் காரணமாக மேனுட்டிசையிலும் பல தரப்பட்ட யாழ்க்கருவிகள் வழக்கற்றுப் போயின. ஸ்காட்லாந்து

தேசத்தில் வழக்கிலிருந்த யாழும் அதை வாசித்த பாணர்களும் மறைந்த துயரத்தை Sir Walter Scott என்பவர், The Lady of The Lake, The Lay of The Last Minstrel, என்ற இரு அழியாக் காவியங்களாக வடித்திருக்கிறார். "வட புலத்து நல்யாழே' நீருற்றினுக்கு நிழலளிக்கும் இம் மரக்கிளை மீது நெடிது தங்கினை, இலையொலியும், அருவி நீரொலியும் இசையியம்ப நின்னரம்புகள் இசையின்றித் துயிலுதல் முறையாகுமோ? என ஆரம்பித்து யாழை முன்னிலைப்படுத்திக் காவியம் பாடியிருக்கிறார். இதை மேற்கோள் காட்டிய விபுலானந்த அடிகள் "வடபுலத்துநல்யாழே" என்றிருப்பது "தென்புலத்து நல்யாழே" என இருப்பின் தமிழ் நாட்டுப் பாணர் இசைத்த யாழுக்கு இப்பாடல்கள் பொருந்தும் என்கிறார்.

வளரும் இசையின் சூழ்நிலைக்கேற்ப, சில கருவிகள் மறைவது இயல்பு. அதற்காக நாம் வருந்தினாலும் அதை நாம் தடுக்க முடியாது என்பதற்காக இங்கும் மேனாட்டிலும் இதுநடந்திருக்கிறது எனக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

யாழுக்குப் பதிலாக மேனாட்டில் "Piano" வந்தது போல் நம் நாட்டிசையில் வீணை ஏற்கப்பட்டது என்று கூறினேன். எப்பொழுது யாழ் மறைந்தது. வீணை ஏற்கப்பட்டது என்று பார்ப்போம். சங்க காலத்தில் எல்லா நூல்களிலும் யாழே கூறப்பெற்றுள்ளது. பின்னர் "இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்" என்று கூறப் பட்டதையும் கண்டோம். சைவ சமய குரவரில் மூவர் காலத்திலும் யாழ் வழக்கிலிருந்தது; வீணையும் வழக்கிலிருந்தது.

திருஞானசம்பந்தர் சமய குரவர் மட்டுமல்லர். அவர் இசைப் புலமையிலும் ஈடு இணையற்றவர். தமிழ் மொழியில் எல்லையில்லாப் பற்றுடையவர். அவருக்குப்பின் வந்த சுந்தரர் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று கூறுவார். மூவாண்டு நிறையாக் குழந்தைப்பருவத்தில் அவர் முதன்முதலாகப் பாடிய "தோடுடைய செவியன்" என்ற பதிகம், பாலூட்டியருள் புரிந்த சிவன் இவனே எனத் தந்தையார்க்குச் சுட்டிக் காட்டும் அளவிலே நில்லாது, தாம் பருகிய நிலையிற் பெற்ற சிவானுபவ இன்பத்தினைத் தமிழுக்கேயுரிய அகப்பொருட்டுறையில் கூறியது, "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி யொருவற் கெழுமையும் ஏமாப்புடைத்து" என்ற வள்ளுவர் கூற்றுக் கிலக்கணமாக அமைந்தது. சம்பந்தரின் இசைப் புலமையை வலியுறுத்தவே திருக்கோலக்கா இறைவன் பொற்றாளம் அளித்தான் போலும். அக்காலத்தில் இணையற்ற யாழ்ப்பாணர் ஆகிய திருநீலகண்ட யாழ்ப்பாணர் சம்பந்தரின் இசைப்புலமையை அறிந்து அவருடன் பல திருக்கோயில்கட்குச் சென்று அவர் பாடிய பதிகங்களை யாழில் வாசித்தார்.

ஏழாவது ஆண்டில் உபநயனம் நடந்த பின்னர்ச் சில நாட்கள் சீர்காழியில் தங்கியிருந்த சம்பந்தர் மொழிமாற்று, மாலைமாற்று, வழிமொழி மடக்கு, இயமகம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை, ஈரடி யீரடிவைப்பு, நாலடி மேல் வைப்பு, முடுகியலாகிய திருவிராகம், சக்கரம் என்று மூல இயலிசை இலக்கண அடிப்படையில் பதிகங்கள் பாடினார் என்று அறிகிறோம். இவை எல்லாவற்றையும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் உடனிருந்து வாசித்தார்.

ஓரடியீரடி வைப்பு, நாலடி மேல் வைப்பு என்ற முறைகள்தாம் பின்னர் பல்லவி, அனுபல்லவி சரணமாக மலர்ந்தன என்று இசை ஆராய்ச்சியாளரான வீ. ப. க. சுந்தரம் அவர்கள் கூறுகிறார். சம்பந்தர் பதிகங்களில் திருக்கடைக்காப்பு என்ற கடைசிப் பாட்டில் அவருடைய பெயரைச் சேர்த்திருப்பது பிற்காலத்து இசைப் பேரறிஞர்கள், தங்கள் படைப்புகளில் முத்திரை வைப்பதற்கு முன்னோடியாக அமைந்தது.

ஆனால் இசை வரலாற்றில் இத்தகைய பெருமான் செய்த முக்கிய காரியம் உலகறிய யாழிலடங்காத வண்ணம் மிடற்றில் பாடலாம் என்று நிரூபணம் செய்ததுதான். இதைச்சில அறிஞர்கள் "எடுத்த இயலும் இசையும் தம்மின் முரித்துப் பாடுதல் முரியெனப் படுமே'' என்ற சூத்திரத்தை மேற்கோள் காட்டி, இந்த முறையில் பாடினால் யாழில் அதை வாசிக்க முடியாது என்பது நாடறிந்த ஒரு விஷயம் போல் கொள்கிறார்கள். "மாதர் மடப் பிடியும்'' என்று அவர் பாடிய பதிகம் எப்படி முறியின் இலக்கணத்துக்குட்படுகிறது என்று யாரும் விளக்கவில்லை. அப்படி எல்லோருக்கும் தெரிந்த ஒரு உத்தியைச் சம்பந்தர் கைப்பிடித்தார் என்று கூறுவது அவருக்குப் பெருமையாக அமையவில்லை.

யாழ் முரியை யாழில் வாசிக்க முடியாது என்பது நாடறிந்த விஷயம் என்றால் யாழில் அக்காலத்திலே பெரிய விற்பன்னராக இருந்த நீலகண்ட யாழ்ப்பாணருக்கும் அது கட்டாயம் தெரிந்திருக்கும், அவர் அந்தப் பதிகத்தை வாசிக்க முயன்றும் இருக்க மாட்டார்.

ஆகையினால் அதுவரை யாருக்கும் தெரியாத ஒரு முறையில் சம்பந்தர் பாடியிருக்க வேண்டும் என்று கொள்வது தான் சரி. நம்பியாண்டார் நம்பி இதை "ஏழிசை யாழை எண்டிசை யறியத் துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்" என்று பாடுகிறார். கர்நாடக இசைக்குரிய கமகங்களை யாழில் வாசிக்க முடியாதென்று நாம்

முன்னர்க் கூறினோம். ஆகையால் சம்பந்தர் முதன்முதலாக கமக பூர்வமாகப் பாடினார் என்றும் கொள்ளக்கிடக்கின்றது. இந்த சம்பவத்திற்குப் பிறகு யாழ் வழக்குக் குன்றிப் பின்னர் மறைந்து விட்டது என்றும் பார்க்கிறோம். இந்த சம்பவத்திற்குப் பின்னர் நாவுக்கரசருடன் திருமறைக்காட்டில் இருந்தபோது பாடிய கோளறு பதிகத்தில் "வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன், மிக நல்ல வீணை தடவி" என்று வீணையின் சிறப்பைக் கூறுகிறார் "தடவி" என்ற சொல்லில் கமகம் வாசிக்கும் முறை அடங்கியிருக்கின்றது. திருநாவுக்கரசரும் ''மாசில் வீணையும் மாலை மதியமும்'' என்று வீணையைச் சிறப்பித்துப் பாடுகிறார். சம்பந்தர் யாழ் முரி பாடியது ஒரு பெரும் புரட்சி என்பது இதன் விளைவுகளை நாம் ஆராய்ந்தால் தெளிவாகும்.

இவற்றை நோக்கும் போது, தமிழிசையில் அடிப்படைக் கருவியாக இருந்த யாழ் மறையவும் தசவித கமகங்கள் வாசிக்கக் கூடிய வீணையின் அடிப்படையில் இசை அமையவும், ஞானசம்பந்தரே காரணமாய் இருந்தார் என்று தெரிகிறது. ஆகையால் இன்று கர்நாடக இசை என்று நாம் அழைக்கும் தமிழிசைக்கு அவரே தந்தையெனக் கூறலாம். சம்பந்தர் வாழ்ந்த காலம் கி. பி. 638-655

சுந்தரமூர்த்தி நாயனார், அப்பர், சம்பந்தர், மறைந்த சில வருடங்களில் 7 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். இவருடைய அன்னையின் பெயரே இசைஞானியார். இவர் சம்பந்தரின் அடிச்சுவட்டிலே இசையையும், தமிழையும் பரப்பியவர். இவரும் திருக்கடைக்காப்பில் முத்திரை வைத்துப் பாடினார். நாவலூரன் "வன்தொண்டன்", "இசைஞானி சிறுவன்" என்று பலவாறு முத்திரை வைத்தார். இவர் சம்பந்தருடைய அடிச்சுவட்டில் பாடின போதிலும், எங்குமே யாழ்ப்பாணரை உடன் அழைத்துச் செல்லவில்லை. ஆகையால் இவர் காலத்திலும் யாழ் வழக்கு மேலும் குன்றியதைக் காண்கிறோம்.

சுந்தரர் காலத்தில் சமணர் ஆதிக்கமோ, புத்தர் ஆதிக்கமோ இல்லை. சேர, சோழ, பாண்டியர் மூவருள் போர் இல்லை. மூவரும், சுந்தரருடன் திருப்பரங்குன்றத்தில் வணங்கியதாகச் செய்தி இருக்கிறது. அதனால் இவர் காலத்திலும், அவருக்குப் பின்னரும், இசையிலும், தமிழிலும், சைவத்திலும் ஒரு மறுமலர்ச்சி இருந்தது என்று கூறலாம். அப்படி இருந்தும் 9 ஆம் நூற்றாண்டில் தேவாரப் பதிகங்களும் அவைகளைப் பாடும் முறையும் மறைந்து விட்டன.

(தொடரும்)

சைவசித்தாந்த வரலாறு

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,
தருமபுரம்.

("சைவசித்தாந்த வரலாறு" என்னும் தலைப்பிலான இவ்வாராய்ச்சிக் கட்டுரை, தருமை ஆதீனம், அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், ஸ்ரீ காசியில், 1988 டிசம்பர் 8, 9, 10 ஆகிய நாள்களில் நடத்திய மூன்றுவது அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கில், இரண்டாம் நாள் 9—12—88 அன்று படித்தளிக்கப் பெற்றது.)

தோற்றுவாய் :

தமிழ்நாட்டில் சைவசித்தாந்தச் செந்நெறி, தோற்றங்கொண்டு வளர்ந்தமைந்த திறத்தை, 'சைவசித்தாந்த வரலாறு' என்ற இவ்வாய்வுக் கட்டுரை சுருக்கமாக எடுத்துரைக்கும் நோக்கில் நடையிடுகிறது. வேதகாலம்முதலாய், சைவசித்தாந்தசாத்திரங்கள் பதினான்கும் உருப்பெற்ற காலம் வரையிலான கால எல்லையை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப் பெறுகிறது. சைவசித்தாந்த வரலாற்றை உருவாக்குவதற்கு வேண்டிய அளவு. சைவ சமய வரலாறும், சைவ இலக்கிய வரலாறும் துணையாகக் கொள்ளப்படுகின்றன.

பகுப்பாய்வு :

'சைவசித்தாந்த வரலாறு' என்ற இவ்வாய்வுக் கட்டுரை. 1. வேதங்கள், 2. வேதாந்தம், 3. சிவாகமங்கள், 4. சங்க இலக்கியங்கள், 5. சைவத் திருமுறைகள், 6. சித்தாந்த முதல் நூல்கள், 7. மெய்கண்டார், 8. அருணந்திசிவம், 9. உமாபதிசிவம் என்ற ஒன்பது உள்தலைப்புக்களில் பகுத்தாராயப்படுகிறது. வரலாறுகாணும்நோக்கில் எழும் இக்கட்டுரையில் சைவசித்தாந்தத் தோற்றம், வளர்ச்சிமுதலியனவற்றில் காலஎல்லைகளுக்கு முதன்மை தரப்படுகிறது. எனவே, சித்தாந்த சாத்திர நூல்களின் உள்வீடுகள் பற்றியோ, அவற்றின் ஆசிரியர் வரலாறுகள் பற்றியோ விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப் பெறவில்லை. தேவையான இடங்களில் ஓரளவு இவை குறிக்கப் பெறுகின்றன.

வேதங்கள் :

சைவ சித்தாந்தம்பற்றிக் குறிப்பிடும் சைவ இலக்கிய ஆசிரியர்கள் பலரும்,சைவசித்தாந்த வரலாற்றை வேதத்திலிருந்தே தொடங்க வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறுகின்றனர்.

"வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க" 1

என்ற பெரியபுராணத் தொடரும்,

"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்" 2

என்ற திருமந்திரத் தொடரும்,

"அருமறை ஆகமம் முதல்நூல் அனைத்தும் உரைக்கையினுல்"3

என்ற சிவஞான சித்தியார் தொடரும், சைவத்திற்கும், சைவ சித்தாந்த உருவாக்கத்திற்கும் வேதமே மூலம்என்பதை வற்புறுத்து கின்றன.

வேதங்கள் இருக்கு முதல் நான்காக விரியும். இவற்றுள்ளும் அதர்வணம் ஒழிந்த ஏனை மூன்றுமே சிறப்பாகப் பேசப்பெறும். 4 இவ்வேதங்களின் காலம் கி. மு. 3500 க்கு முற்பட்டன என்பர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன். 5 இவற்றில் காணப்படும் மந்திரங்களிலும், பிராமணங்களிலும் பல தெய்வக் கோட்பாடு களும், வழிபாடுகளும் நிறைந்து காணப்படுகின்றன. சைவ சித்தாந்தம் விரித்துரைக்கும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் இயல்புகளுள் சில வேத வாக்கியங்களுக்கு இடையிடையே காணப் படுகின்றன. ஆன்மாக்களுக்கு மீண்டும் பிறப்பு உண்டென்னும் சைவசித்தாந்தக் கொள்கை வேதங்களில் வெளிப்படையாகக் காணப்படவில்லை. எனினும் இக்கருத்தை வேதங்கள் மறுக்கவில்லை என்றார் கி. லக்ஷ்மணன். 6

"ஆரணநூல் பொது; சைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினுல் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும் நிகழ்த்தியது" 7

---

1. திருத்தொண்டர் புராணம், பா. 1904.
2. திருமந்திரம், பா. 2397.
3. சிவஞான சித்தியார் சுபக்கம், பா 266.
4. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, சிவஞான போதம் மூலமும் சிற்றுரையும், மெய்கண்ட தேவர் வரலாறு, ப. 1
5. சி. லக்ஷ்மணன், இந்தியத் தத்துவ ஞானம், ப. 12
6. மேற்படி. பக். 46, 47.
7. சிவஞான சித்தியார் சுபக்கம். பா. 276.

என்றும் சிவஞானசித்தியால், வேதம் பொது நூலாகவும் சிவாகமம் சிறப்பு நூலாகவும் ஆம் என்பதும், அதனால் வேதம் உலகினர் பலர்க்கும், சிவாகமம் சத்திநிபாதர்க்கும் உரியன என்பதும் பெறப்படுகிறது. வேதங்களில் காணப்படும் மகாவாக்கியங்களுக்குப் பொருள் காணும் நிலையில் வேதவழிப்பட்ட வைதிக மதங்கள் பல தோன்றின.

வேதாந்தம் :

வேதப்பகுதிகளை கர்மகாண்டம், ஞானகாண்டம் என இரண்டாகப் பகுப்பர். ஜோதிஷ்டோமம் (சொர்க்கத்தை விரும்பிச்செய்யப்படும் யாகம்) முதலிய புண்ணிய கருமங்களைக் கூறும் பகுதி கர்ம காண்டம். சரீரம் முதலானவைகளின் நிலையாமையைக் கண்டு யான் எனது என்னும் இருவகைப்பற்றுமற்று, முத்தியடைதற்குரிய வழியாகிய உண்மை ஞானத்தைக் கூறும் பகுதி ஞான காண்டம். 8 இதனையே வேதாந்தம் என்பர். இவற்றையே உபநிடதங்கள் என்பர். இவற்றை உபநிடதங்கள் என்பது பெருவழக்கு. மேலும் வேதசிரம் ரகஸ்யம் என்றும் இதனைக்குறிப்பர். 9 உப+நி+சத்து என்று பிரிந்து நின்று, உப - அருகு; நி - செம்மை; சத்து - அடையப்பட்டது என உபநிடதம் என்ற சொல்லுக்கு அறிஞர் பொருள் கூறுவர்.

வேதம் என்பதை ஒருமரம் என்று கொண்டால் அதில் முற்றிய இலை, இளந்தளிர், அரும்பு, பூ, பிஞ்சு காய் முதலிய பலவும் இருக்கும். அவைகளே பலவாகிய வைதிகத்துறைகள். அம்மரத்தின் உச்சியிற் பழுத்த வேதாந்தம் எனப்பட்டதே சிவாகமம். அதுவே கனி. அதிலும் கோதும், விதையுமாகியவை சைவபேதங்கள் ஆகிய அகச்சமயங்கள். அக்கனியைப் பிழிந்து வடித்தெடுத்த சாரமே சைவசித்தாந்தம். இந்த சாரத்தைப் பருகித் திளைப்போர் மிகச்சிலரே என்று, பண்டார மும்மணிக்கோவையுள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நுட்பமுற விளக்கியுள்ளார். 10

தெளிவான சைவ சமயக்கொள்கைகளும், தத்துவக் கூறுகளும் உபநிடதங்களிலேயே காணப்படுகின்றன. மாண்டூக்கிய உபநிடதம் சாந்தம், சிவம், அத்வைதம், ப்ரபஞ்சோபசமம் என்று கடவுளின் நிர்க்குண நிலையை விளக்கி, கடவுளைச் சிவன் என்று குறித்துக் காட்டுகின்றது. ஈசன், ஹரன், தேவன், ருத்திரன்,

---

8. சி. அருணைவடிவேல் முதலியார், சித்தாந்த சைவவிளு விடை. பக். 13, 14

9. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதானசிந்தாமணி. ப. 1507

10. பண்டார மும்மணிக்கோவை பா. 10

விஸ்வசக்ஷு விஸ்வமுகன், பகவான், ஈசானன், மகேஸ்வரன், சிவன், சிவாபதிபன், விஸ்வாதிபன், மகாத்மா, ஞரியருபன், பதி என்னும் பதங்கள் கடவுளுக்குரியனவாகச் சுட்டப்பட்டுள்ளன என்று டாக்டர் டி. எம். பி. மகாதேவன் குறிக்கின்ருர். 11

சிவன் படைத்தல் முதலாய ஐந்தொழில் புரிகின்ருன் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. உபநிடதங்கள் இறைவனின் ஐந்தொழில்களை முறையே 'விஸ்வசிய ஸ்ரஷ்டாரம் (படைத்தல்) 'புவனஸ்யகோப்தா' (காத்தல்) 'சம்ஹரித்த்யே விதேவ'(அழித்தல்) 'சர்வபூதேஹு ' (மறைத்தல்) 'ஜுஷ்டஸ்த தங்னேனும ரித்து மேதி' (அருளல்) எனக் குறிக்கிருர். 12 எனவே, வேதாந்தங்களில் சைவசிந்தாந்த வரலாற்றில் தோற்றத்தை ஆராய்வதற்கான - தெளிவான முதற்சான்றுகள் காணப்படுகின்றன, எனலாம்.

சிவாகமங்கள் :

'திரிபதார்த்தத்தை போதித்து ஆன்மாக்களுக்கு மலநாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுத்தற் பொருட்டு பரமாப்தராம் பதியினின்றும் வந்த கட்டளைகளே சிவாகமங்கள்' என்பர். 13 சிவாகமங்கள் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் இலக்கணங்களையும், சரியை, கிரியை,யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களில் முறைமையையும் சாலோக, சாமீப சாருப, சாயுச்சியம் என்னும் சதுர்வித முத்திகளையும், வேறுபல வற்றையும விளங்க உரைப்பன. சைவாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈருக இருபத்தெட்டாகும். வேதம் சுருங்கச் சொல்லிய பகுதிகளை, விளங்க உரைப்பவை ஆகமங்கள் என்பது பற்றி இவற்றை வேத விசேஷங்கள் எனவும் கூறுவர். 14

சிவாகமங்கள் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞான பாதம் என நான்கு பாதங்களாக விளங்கும். 'கிரியை என மருவும் அவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்' என்பர் உமாபதி சிவம். 15 எனவே, ஞானபாதம தவிர எஞ்சிய மூன்றையும் கிரியை என ஒன்ருகவே கொள்ளுவர். இவற்றின் வேருய ஞானபாதப் பகுதியே சைவசித்தாந்தம் எனப்படும். வேதம், வேதாந்தங்கள் வளர்ச்சியுற்று ஆட்சி செலுத்திய காலத்திலேயே அவற்ருேடு ஒப்ப

---

11. ந. சந்திரகாந்த முதலியார், "உபநிடதங்களும் சித்தாந்த சைவமும்" சைவசமயச் சொற்பொழிவுகள் பக் 164. 65

12. மேற்படி பக். 166

13. சி. அருணைவடிவேல் முதலியார், சித்தாந்த சைவ விஞ விடை. ப. 15

14. மேற்படி. பக். 17

15. சிவப்பிரகாசம். பா. 10

வளர்ந்து நின்று ஆகமங்கள் அவற்றிற்குத் தெளிபொருள்பெற்றன என்பர் திரு. ஔவை. அ. துரைசாமி பிள்ளை. 16 உலகம் உண்டு, உயிர்கள் உண்டு, இறைவன் உண்டு எனத் தெளியக்காட்டி, ஒன்றொன்றிற்குமுள்ள தொடர்பையும் எடுத்தோதி உய்யும் நெறி காட்டுவதில் இவ்வாகமங்கள் சிறந்து நின்றன. இவற்றின் உருவாக்கத்தால் 'உலகியல் வேத நூல் ஒழுக்கம் என்பதும், இலகு மெய்ந்நெறி இச் சிவாகம நெறி' என்பதும் மக்களுக்கு நன்கு புலப்பட்டலாயின. சிவாகம நெறிபற்றித் தெளிவு பெற்றோர் மேற்கொண்ட ஆகமநெறி 'சைவநெறி' என்றும், வேத வேதாந்தங்களுக்குத் தம் கலைப்புலமை துணையாகக் கொண்டு காட்டினோர் காட்டியவற்றையே மேற்கொண்டாரது நெறி வைதிக நெறி என்றும் இயலுவனவாயின. 17

சங்க இலக்கியங்கள் :

வேதம், வேதாந்தம், சிவாகமங்களில் முறையே சைவ சித்தாந்தச் செந்நெறி அரும்பி, மலர்ந்து, காய்க்கத்தொடங்கிய காலங்களிலேயே, தமிழ் மொழியிலும், தமிழ்ச் சான்றோர்களால் இந்நெறி தோற்றி வளர்க்கப் பெற்று வந்துள்ளமை தொல்காப்பியம், கடைச் சங்க இலக்கியங்கள், திருக்குறள் முதலாய அறநூல்களால் நன்கு புலனாகிறது. இடைச் சங்க கால இலக்கணம் எனக் கூறப்படும் தொல்காப்பியம் கி. மு. ஏழாம் நூற்றுண்டுக்கு முற்பட்டதென்பர்.

" வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் " 19

என இறை இயல்பும்

" நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் " 20

எனப் பிரபஞ்ச அமைப்புப் பற்றியும்,

" ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின் " 21

என வினை, மறுபிறப்பு முதலியன பற்றியும் இவை போலும் வரும் அரிய தொல்காப்பியத் தொடர்களில் சைவசித்தாந்தக் கூறுகள் கருக்கொண்டு வளர்ந்து தொல்வரலாறு புலப்பட்டுத் தோன்றுகின்றன.

---

16. சிவஞான போதம் மூலமும் சிற்றுரையும். " மெய்கண்ட தேவர் வரலாறு " ப. 2
17. மேற்படி ப. 2
18. தொல்காப்பியம் நூ. 1586
19. மேற்படி நூ. 1581
20. மேற்படி நூ. 1306

சங்கஇலக்கியங்களாகியபத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகை நூல்களுள் 'சிவன்' 'சைவம்' என்ற சொற்கள் காணப் பெற வில்லை. எனினும் இச்சொற்களால் குறிக்கப்படும் இறையியல்பும், தத்துவக் கூறுகளும் சங்க இலக்கியங்களில் பலவாகக் காணக் கிடைக்கின்றன.

" தீதும் நன்றும் பிறர்தர வாரா " 21

" இம்மைச் செய்தன மறுமைக்கு ஆம் " 22

எனவரும் புறநானூற்றுத்தொடர்களுள் வினைக்கோட்பாடுவிளக்கித் தோன்றுகின்றது.

" பெண்உரு ஒருதிறன் ஆகின்று அத்திறன்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும் " 23

என்றும்

" நீல மேனி வாலிழைபாகத்து ஒருவன் " 24

என்றும் இறைவனை உமையொருபாகனைச் சித்தரிக்கும் சிவசக்தித் திறத்திற்குச் சான்றாக அமைகின்றன. அறுபதற்கும் மேலான இத்தகு தொடர்கள் சங்க இலக்கியங்களுள் காணப்படுகின்றன.

திருக்குறளின் உட்கிடக்கை சைவசித்தாந்தமே என்பர் திரு. க. வச்சிரவேல் முதலியார். கடவுள் வாழ்த்தில் உரைக்கப்படும் இறை இலக்கணங்கள் சைவ சித்தாந்தம் பெறும் பதி இலக்கணங்களுடன் பெரிதும் பொருந்தி வரக்காணலாம். மேலும் துறவறவியலில்வரும் கூறுகள் பலவும் சைவசித்தாந்தத்துடன் தொடர்பு காணத்தக்கன. 'பற்றுக பற்றற்றான் பற்றினை' 25 என்றும் 'சார்புணர்ந்து சார்பு கெட' 26 என்றும் தொடங்கும் குறட்பாக்கள் சித்தாந்தச் செந் நெறியில் உருவாக்கத்திற்குத் துணையாவன. விரிவஞ்சி ஒப்புமைக் கூறுகளை எடுத்துக்காட்டக்கூட வில்லை. சங்கம்மருவிய காலத்தாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் சைவம் பற்றிய அரிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. சைவம் என்ற சொல்லாட்சி மணிமேகலையில்தான் முதல் முதலாகக் காணப் படுகிறது. இதுபோல சைவசித்தாந்தம் என்ற சொல்லைத் திருமந்திரத்தில் காண முடிகிறது. (தொடரும்)

---

21. புறநானூறு பா. 192
22. மேற்படி பா. 134
23. மேற்படி, கடவுள் வாழ்த்து
24. ஐங்குறுநூறு பா. 192
25. திருக்குறள். 350
26. மேற்படி 359

திருமுறை ஓதுவார்க்குத் திருமலைமன்னர் தந்த செப்புப் பட்டயம்

வித்துவான் திரு. தா. குருசாமி
மதுரை.

முன்னுரை :

இராமநாதபுரம் மாவட்டம் - திருப்பூவணம் நரிக்குடி செல்லும் சாலையில் உள்ள சிற்றூர் ஓதுவார் செங்குளம். இது மதுரை மீனாட்சிசுந்தரர் கோயில் திருமுறைப்பணி செய்வதற்கு விடப்பட்ட மானியநிலம் உடையது. ஆதலின் 'ஓதுவார்' என்கிற அடைமொழி அமையலாயிற்று. இக் கிராமம் செப்புப் பட்டயம் மூலம் சாசனம் செய்துதரப்பட்டுள்ளது. இப்பட்டயத்தை வழங்கியவர் திருமலைநாயக்க மன்னர். இப்பட்டயம் என்னிடம் உள்ளது.

பட்டய விபரம் :

இச் செப்புப்பட்டயத்தின் பிரதியை மதுரைக்கோயில் 1964 ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலரில் வெளியிட்டிருக்கின்றேன். இச் செப்புப்பட்டயத்தின் தொடக்கத்திற்கு முன்பு திரிசூலம் காணப் படுகின்றது. முதலில் விஜயநகர வேந்தரின் பெருமை பேசப்படுகின்றது. அதன்பின்பு அவ்வேந்தரின் பிரதிநிதியாக மதுரையில் இருந்து அரசாண்ட நாயக்கமன்னரின் பாரம்பரிய வரிசை பேசப்படுகின்றது. பிறகு மதுரைக்கு வந்த ஓதுவார் பாரம்பரிய வரிசை (திருவாரூரில் இருந்து வந்தது) பேசப்படுகிறது. குமரகுருபரசுவாமிகள் 300 ஆவது ஆண்டுவிழா நினைவாகவும், திருமலைமன்னரின் நூற்றாண்டு விழா நிகழ்த்த இருப்பவர்கள் நினைவிற்காகவும் - பட்டய வாசகத்தை அப்படியே நாயக்கர் பரம்பரையில் இருந்து தருகிறேன்.

பட்டய வரிகள் :

"பாண்டி மண்டல ராச்சிய பரிபாலனம் பண்ணியருளா நின்றவிசுவநாதநாயக்கர், பெரியநாயக்கர், பெரியவீரப்ப நாயக்கர், குமாரகிருஷ்ணப்ப நாயக்கர், முத்துவீரப்ப நாயக்கர், கஸ்தூரிரங்கப்ப நாயக்கர், முத்துவீரப்ப

நாயக்கர், திருமலைநா(க்)யக்கனய்யவர்கள் ராச்சிய பரிபாலனம் பண்ணி அருளா நின்ற கலியுக சகாத்தம் ....(4673) மேல் செல்லாநின்ற வெகுதானியஹூ அற்பசிமீ ௴ (15)உ மதுரைத்தலத்து அலங்கார ஓதுவார், ஆனந்த ஓதுவார், கனகசபாதி, ஓதுவார் வீதி விடங்க ஓதுவார் குமாரன் தாண்டவமூர்த்தி ஓதுவாருக்குக் காணியாச்சிப் பட்டயங் கொடுத்தபடி. காணியாச்சியாவது செங்குளம் நஞ்சை நிலம் முப்பதுமுக்காணியும், புஞ்சை இருபத்துமுக்கால விரைப்பாடும் மாவிடை மரவிடை சொர்ணதாய முள்பட காணியாச்சியாக விட்டுக்கொடுத்த படியினாலே சந்திராத்திரர் வரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரையாக ஆண்டு அனுபவிச்சுக் கொள்வாராகவும். திருமலை நாயக்கனய்யன்காரு. மலக்கலூர் ராமச்சந்திரன் எழுத்து."

பட்டய விளக்கம் :

இப்பட்டயம் குறிப்பிடும் திருமலைநாயக்கர் மன்னர் காலத்தில் வாழ்ந்த தாண்டவ மூர்த்தி ஓதுவார் - கவிராயர் என்ற பெயரிலும் திருப்பணிமாலை பாடியுள்ளார். திருமுறைப்பணியோடு - திருப்பணி மாலை ஓதவேண்டிய கடமையும் இவர்களால் ஏற்படுத்தப்பட்டது. இதுபற்றிய ஆவணங்கள் மதுரைக்கோயிலில் உள்ளன. சர்வமானியமாக ஓதுவார்க்கு விடப்பட்ட ஓதுவார் செங்குளம் என் தந்தையார் தாண்டவ மூர்த்தி ஓதுவார் காலம்வரை உரிமையாக இருந்து 1950 ஆம் ஆண்டு இனம் ஒழிப்புச்சட்டப்படி அக்கிராமம் எங்களிடம் இல்லாமற்போனது. அப்படி எங்களை விட்டு அக்கிராமம் அகன்ற பின்பும் அடங்கலில் இன்றும் ஓதுவார் செங்குளம் என்றே வழங்கப்படுகிறது.

பட்டயம் பெற்றவர் சிறப்பு :

பட்டயம் பெற்ற தாண்டவமூர்த்திக் கவிராய ஓதுவார் - முன்னோர்களில் அலங்கார ஓதுவார், திருவாரூர் கமலை ஞானப் பிரகாசரின் தங்கை சிவகாமி அம்மாள் குமாரர் என்பதும், விசுவநாத நாயக்கர் காலத்தில் மதுரையில் மீண்டும் மதுரைக் கோயில் திருப்பணி செய்யப்பட்டு, கோயில் காரியம் சீராக்கப்பட்ட போது, அப்போது மந்திரியாக இருந்த தளவாய் அரியநாத முதலியார் மதுரையில் பாண்டியர் காலந்தொட்டுத் திருமுறைப்

பணிசெய்து வந்தவர்கள், அதற்குரிய நிலத்தை - (சித்தாலங்குடி கிராமம்) அனுபவித்துக்கொண்டு அப்பணியைச் செய்யாமல் - கோயிலின் மெய்க்காவல் முதலிய நிர்வாகப்பணிகளில் சென்று ஓதும் மரபு தெரியாமற் போய்விட்டனர். அரியநாத முதலியார் வேண்டிக்கொண்டபடி திருவாரூரிலிருந்து அலங்கார ஓதுவார் அனுப்பிவைக்கப்பட்டு, அவ்வப்போது கோயிலில் இருந்து நெல் சம்பளம் பெற்று இரண்டு மூன்று தலைமுறையாகப் பணி நடைபெற்றிருக்கிறது. சித்தாலங்குடி கிராமத்தில் இருந்தும் குறிப்பிட்ட நெல்கொடை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இப்படிச் செய்வது போதாது என்று தாண்டவமூர்த்திக் கவிராய ஓதுவார் திருமலை மன்னர் காலத்தில் ஓதுவார்க்கு என்று தனியாக சர்வமானியம் ஓதுவார் செங்குளம் கிராமம் பெற்றூர். இச்செய்தி என்தந்தையார் கூறியது.

திருமலைமன்னர் சிறப்பு :

தெலுங்கு பேசும் திருமலைமன்னர் தமிழுக்குச் செப்புப்பட்டயம் தந்த செய்தி வரலாற்றில் எழுதப்படவில்லை. அச்செப்புப்பட்டயம் போல, குமரகுருபரமுனிவர்க்கும் நீதிநெறிவிளக்கம் பாடியதற்காக புலவர் முற்றூட்டு ஏனாதி என்னும் கிராமம் அளித்ததாக என் தந்தையார் கர்ணபரம்பரையாகக் கூறிய செய்தி நினைவு கூர்தற்குரியது. திருமலைமன்னர் வரலாறு எழுதிய கோவிந்தசாமி ஐயர் என்பவர் - திருமலை- நாயக்கர் காலத்துச் செப்புப்பட்டயம் கிடைத்திருந்தால் - மேலும் சிறப்பாக நாயக்கரின் தமிழ்ப்பணியை ஆய்வதற்கு வாய்ப்பாகி இருக்கும்.

முடிவுரை :

திருமுறை இசையையும் மரபையும் இன்று ஆதீனங்கள் பேணி வருகின்றன. தருமை ஆதீனம் தேவாரப்பாடசாலை மாணவர்கள் இதுவரை கோயிலில் பணிசெய்து திருமுறை வளர, குருவருள் உதவியுள்ளதுபோல் மேலும் செழித்து வளர அரசும் உதவிசெய்ய இச்சமயம் விண்ணப்பித்துக் கொள்வேன்.

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,
தருமபுரம்.

(மலர் 48, இதழ் 4, பக்கம் 201 இன் தொடர்ச்சி.)

காப்பியம் தொடங்குமுன் கூறப்படுவது அவையடக்கம். தம்மறிவு நலனை ஞானமுடையோர் ஏற்பரோ, நகைப்பரோ என்று கருதிக்கூறும் சொற்கள் அவையோர்க்கு அடங்கிய தன்மை காட்டும். சிந்தாமணி இதனைச் சுவைபடக் காட்டுகிறது.

புலமை மிக்கார் செயல் :

மணி சாணை பிடிக்கப் பெற்றால்தான் ஒளிவீசும். ஒளி குறைந்த மணிகளையும் தம் முயற்சியால் அத்துறை சார்ந்தோர் ஒளிபெறச் செய்வார்களே. அப்படி வழுச்சொற்களையும் வழுவமைதியர்க்குவர் புலமை மிக்கார் என்று பாராட்டும் வகையில், தான் நூலமைத் தமைக்குக் காரணம் கூறினர் திருத்தக்க தேவர்.

சொற்பாலுமிழ்ந்த மறுவும் மதி யாற்கழூஉவிப்
பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார் (சிந். 4)

என்சொற் பழுதாயினுங் கொள்ப வன்றே
பொய்ந்நீர வல்லாப்பொருளால் விண் புகுதுமென்பார்.(சிந்.5)

கம்பர் இதே அமைப்பில் தச்சரின் சிறுர் வரைந்த கோடுகள் தந்தையர்க்கு வரைபடமென விளங்கிப் பாராட்டும் மனமகிழ்வைத் தருமே! அப்படி என் புன்கவிகளும் புலமையாளருக்கு நலமே தருமென அவையடக்கம் கூறினர்.

அறையும் ஆடரங்கும்மடப் பிள்ளைகள்
தறையில் கீறிடில் தச்சரும் காய்வரோ.

கருணை மழை :

நாட்டுவளம் கூறுகின்றவர்கள் வான்சிறப்பை முதலில் கூறுவதன் உண்மை; கடவுள் வாழ்த்தின் பின் அவனருளே யென்னத்தகும் மழையைக் கூறுவது முறைதான் என்று திருக்குறளுக்கு அதிகார இயைபு எழுதப்படுவதை அடியொற்றித்தான் என்பதில் ஐயமில்லை.

வெண்மேகமும் வெண்ணீருடியும் :

மேகக் கூட்டங்கள் கடலில் மேய்ந்து, கொன்றை சூடினன் சடைபோல் மின்னி, மலையைச் சேர்ந்து மழையாய்ப் பொழிந்தது. தேவர் வாக்கில் இது,

பொலங்கொள் கொன்றையி னுன்சடை போன்மின்னி
விலங்கல் சேர்ந்துவிண் ணேறிவிட் டார்த்தவே. (சிந். 32)

கம்பர் சிவபெருமானின் மேனி வண்ணத்தை இணையாக்க எண்ணினர். பவளம் போல் மேனியானாலும் பால்வெண்ணீறு துதைந்த வண்ணத்தைத் திருநாவுக்கரசர் காட்டியது போல் கம்பர் காட்டினர்.

நீறு அணிந்த கடவுள் நிறத்த வான்
ஆறு அணிந்து சென்று (கம்.)

மீண்ட காட்சிக்குத் தேவரே வித்திட்டார் என்பதில் ஐயமில்லை.

மேக வள்ளல்கள் :

கைம்மாறு கருதாக் கடப்பாடு மாரி மாட்டே உள்ளது என்பார் வள்ளுவர். சிந்தாமணி மேகத்தின் வள்ளல் தன்மையை நதிகளும் ஏற்றபாங்கை எடுத்து மொழிந்தது.

வள்ளற் கைத்தல மாந்தரின்
உள்ள மில்லவர்க் கூர்தொறு முய்த்துராய்
வெள்ள நாடும டுத்துவி ரைந்ததே (சிந். 36)

கம்பர் - மேகத்தின் தனக்கென எதையும் பாதுகாவாத வள்ளல் தன்மையை நினைப்பூட்டினர்.

உள்ளி உள்ள எல்லாம் உவந்துஈயும்அவ்
வள்ளியோரின் வழங்கின மேகமே. (கம். 15)

மாறியமைந்த கூறுகள் :

சிந்தாமணிச் செய்தியை நேர்மாருன அமைப்பிலும் நினைப் பூட்டுந் திறமை கம்பரிடம் உண்டு.

நெருங்கிய கூட்டத்தை வருணிக்கும்போது 'எள்போட்டால் எள் விழாது!' என்று கூறும் வகை அறிவோம்; அதனை எங்கே ஆளவேண்டும் என்பதனை நாம் ஆழமாகச் சிந்திக்கவில்லை. சிந்தாமணியில்,

" இட்டவெள் நிலப்படா வகையி னீண்டிய
முட்டிலா மூவறுபாடை மாக்கள்
வளநகருக்குப் பொலிவு கூட்டினர் " என்று வரும். (சிந். 93)

பண்ணகத் தினிய சொல்லாள் பாவையைப் பயந்த ஞான்றே
எண்ணிட மின்றி மன்ன னிம்மலே யிறைகொண்டு. (சிந். 538)

எள்ளிடமின்றி நெருங்கினர். (சிந். 635)

கம்பர் மங்கல நிகழ்ச்சிக் கூட்டத்தை இப்படி வருணிப்பதை விரும்பவில்லை. சீதையின் திருமணத்திற்காகத் தசரதன் படைகளுடன் வருகிருன். திருமணக் கூட்டம் என்பதால் 'உழுந்து இட இடமில்லை உலகம் எங்கணும்' (கம் 754) - உழுந்து எள்ளின் இடத்தைப் பிடித்துக் கொள்ளச் செய்தார்.

தொண்டைக்கனி - தூதுளங்கனி :

பரத்தையர் வீதி கூறும் சிந்தாமணி பெண்ணின் இதழுக்குத் தொண்டைக் கனியை உவமை காட்டியது.

'துப்புறழ் தொண்டைச் செவ்வாய்' (சிந். 107)

கம்பர் தொண்டைக் கனியில (கோவைப்பழம்) சில வெண்மைக் கோடுகளும் இருப்பதால் அது செவ்விதாகாது என்று இதழுக்குத் தூதுளங்கனியை உவமையாக்கினர்.

தூதுளங் கனியை வென்று
துவர்த்தவாய் வெண்மை தோன்ற (கம். 4942)

தந்தையும் தாயும் :

அரசனை உலகைக் காக்கும் வகையில் தந்தையுடன் இணைத்துக் கூறும் நிலை உண்டு. திருத்தக்க தேவர் சச்சந்தனைத் தந்தையாகக் கூறினர்.

கோதை நித்திலஞ் சூழ்குளிர் வெண்குடை
ஓதநீருல கொப்ப நிழற்றலால்
தாதை யேயவன் ருணிழற் றங்கிய
காத லாற்களிக் கின்றதிவ் வையமே. (சிந். 159)

கம்பர் - காத்தலுடன் கருணையும் கொண்ட அரசனுக்குத் 'தந்தை என்ற சிறப்பைவிட தாய் என்ற அமைப்பே உயர்வு செய்யும் என்று கருதி ஆளுகின்ருர்.' பால்நினைந்தூட்டும் தாயின் பண்பு மணிவாசகரால் நினைவூட்டப்பட்டதும் காரணமாகலாம்.

தசரதன் 'தாயொக்கும்அன்பின்' - (கம்171) திறத்தில்நின்றது புலவர் உலகமறிந்த செய்திதானே.

கோணங்கள் மாறவும் - திருத்தக்க தேவர் தந்த குறிகளே அடிப்படையாயின என்பதை மறுக்கவியலாது.

(வளரும்)

கணநாத நாயனார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 5—3—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

எழில் கொஞ்சும் தருமைத் திருமடத்தின் வரலாறு அடியேனைப் பிரமிக்க வைத்தது! கி. பி. 1561இல் இருந்து இந்தத் திருமடம் சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிவரும் தொண்டுகளைத் தமிழ் நெஞ்சங்கள் என்றும் போற்றும்! 26 ஆவது தருமைக் குருமணிகள் ஆசியுரைகள் வாயிலாகவும் அருளுபதேச மொழிகளின் வாயிலாகவும் சைவத்தையும் தமிழையும் பரப்பிவரும் பாங்கை எண்ணி மகிழ்ந்தவாறே திருமடம் சேர்ந்தேன். மணி சரியாகப் பத்து.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் சொக்கநாதர் பூசை, பாராயணம் நிறைந்து சித்திராசனத்தில் அமர்ந்தார்கள்; அரஹர முழக்கம் எழுந்தது. அன்பர்கள் திருவடி தொழுது திருநீறு பெற்று அணிந்து மகிழ்ந்தனர். திருமுறைப் பாராயணத்தை அடுத்து ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினார்கள்.

முதலில் மாதச் சிறப்புத் திருநாள்கள் பற்றியும் அந்நாட்களின் தத்துவம், சிறப்பு முதலியன பற்றியும் மனங்கொள விளக்கினார்கள். அடுத்துக் கணநாதர் புராண உபதேசம் செய்தருளினார்கள். சைவ சித்தாந்தச் செறிவோடு அருளுபதேசம் அமைந்தது.

கணநாதர் என்னும் பெயர் இறைவனைக் குறிப்பது; சிவகணங்களுக்குத் தலைவர் என்பது பொருள். கணநாதர் என்னும் திருப்பெயர் தாங்கிய இவ் அடியார் அந்தணர் குலத்தினர்; சீகாழிப் பதியினர். சீகாழிப்பதியின் சிறப்பைச் சேக்கிழார் இப்புராணத்திலும் விளக்கியருள்கின்றார். உலகம் எல்லாவற்றையும் ஈன்று காப்பவள் உமை; உமாதேவியின் திருமுலைப்பால் உண்டருளிய திருஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்தருளியது சீகாழி, மேலும், பேரூழிக் காலத்தில் பெருகி எழுந்த கடல் வெள்ளத்தில், ஆழாது தோணியாக மிதந்து நின்று, உலகம் மீளத் தோன்றுவதற்கு முதலாக நின்றது சீகாழி - இங்ஙனம் உலகம் தோன்றவும் உலகம்

உய்யவும் சீகாழியில் நிகழ்ந்த சிறப்புக்களை உணர்த்திப் புராணத்தைத் தொடர்ந்தார்கள்.

கணநாதர் செய்த தொண்டுகள் பற்றி உளங்கொள உணர்த்தி அன்பர்களை நெறிப்படுத்தினார்கள். கணநாதர் நாள்தோறும் திருத்தோணியப்பர் திருக்கோயிலுக்குச் செல்வார், அன்போடு வழிபடுவார்; நாள்தோறும் நல்ல திருப்பணிகளைச் செய்வார். தம்மை நாடி வரும அன்பர்களுக்குக் கைத்திருத்தொண்டாகிய சரியை நிலைகளைக் கற்பிப்பார்; அவரவர்களைத் தக்க துறைகளில் ஈடுபடுத்துவார். திருநந்தனவனப் பணி செய்பவர்கள், மணம்மிக்க மலர்களைப் பறிப்போர், மலர் மாலை தொடுப்போர், திருமஞ்சனம் ஆட்டுதற்கு நீர் கொண்டு வருவோர், இரவு பகல் என்னும் இரு பொழுதுகளிலும் திருவலகும் திருமெழுக்கும் இடுவோர் திருவிளக்கு ஏற்றுவோர், திருமுறைகளை எழுதுவோர், திருமுறை வாசிப்போர் - என இவ்வாறு அமைந்த பற்பல திருப்பணிகளில் மிகவும் விருப்பம் கொண்டு, தம்மை வந்து அணுகிய அன்பர்களை நெறிப் படுத்தினார்; அவரவர் மேற்கொண்ட பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு இடையூறாக அமைந்த குறைகளை நீக்கினார். திருத்தொண்டுகளை மனம் விரும்பிச் செய்தவர்களைத் திருத்தொண்டர் ஆக்கினார், இல்லறத்தினையும் இனிது நடத்தினார். இறைத்தொண்டு புரிவதிலும் இணையற்றவரானார் - இங்ஙனம் கணநாதர் தொண்டுகளை நிரல்பட அருளிய குருமணிகள் தொண்டுநெறியை - சரியை நெறியை-விதந்து விளக்கும் இப்புராணத் திருப்பாடலையும் அருளிச் செய்து உலகியல் எடுத்துக்காட்டுக்களோடு மனங்கொளவிளக்கினார்கள்.

பாடல் வருமாறு :- :-

"நல்ல நந்தன வனப்பணி செய்பவர்;
நறுந்துணர் மலர்கொய்வோர்;
பல்மலர்த்தொடை புனைபவர்; கொணர்
மஞ்சனப் பணிக்குள்ளோர்;
அல்லும் நண்பக லும்திரு அலகிட்டுத்
திருமெழுக்கு அமைப்போர்கள்;
எல்லையில் விளக்கு எரிப்பவர்; திருமுறை
எழுதுவோர் வாசிப்போர்."

இத்தகு திருப்பணி செய்வோர்க்குப் பெரிதும் நெறிகாட்டியவர் கணநாதர்; திருமுறை எழுதுதல் வாசித்தல் என்னும் இவை பதி புண்ணியச் செயல்கள்: இறைவன் திருவடியை அடைவிக்கும்

இச்செயல்கள் ஞானபூசையாகும் என விளக்கிச் சைவசித்தாந்த சாத்திர நூல்களுள் ஒன்றாகிய சிவஞானசித்தியார் செய்யுளை மேற்கோள் காட்டிச் சித்தாந்த நெறி புகட்டி உய்வித்தருளினார்கள்.

"ஞானநூல் தனைஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல்நன்று
ஈனமிலாப் பொருள் தன்னைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை;
ஊனமிலாக் கன்மங்கள் தபம்செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன்று உயரும்இவை ஊட்டுவது போகம்
ஆனவையால் மேலான ஞானத்தால் அரனை
அருச்சிப்பர் வீடுஎய்த அறிந்தோரெல்லாம்."

என்னும் எட்டாம் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரண விளக்கமாகிய இத்திருவிருத்தத்தைப் பெரியபுராணச் செய்யுளுடன் இயைபுகாட்டி விளக்கியமை சீரிய ஒப்பீட்டாய்வாக அமைந்தது. இத்தகைய தொண்டுகளை - சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிமுறைகளைச் - சுட்டி மனங்கொள்ள விளக்கினார்கள். சரியை என்பது உடலால் செய்யப்படுவது; அதாவதுசரீரத்தால் செய்யப்படுவது. அறிவு சிறிதளவு போதும். எழுபத்தைந்து சதவிகிதம் உடல் உழைப்பும் இருபத்தைந்து சதவிகிதம் அறிவுப் பணியும் என்ற நிலையில் அமைவது. நந்தனவனம் அமைத்தல். மலர்பறித்தல், மாலைகட்டுதல், அலகிடல், மெழுக்கிடல் போன்றவைகளைச் செய்வதும் இறைவனுக்கும் அடியார்களுக்கும் தொண்டு செய்வதும் சரியைத் தொண்டுகளாம். கணநாதர், தாமும் இவற்றைச் செய்து அடியார்கட்கும் இவற்றைக் கற்பித்து நெறிகாட்டினார்.

கிரியை என்பது அறிவும் உடலும் சமமாக இணைந்து செய்ய வேண்டிய ஒன்று. அகத்தும் புறத்தும் சிவபூஜை புரிதல் முதலியன எனலாம்.

யோகம் என்பது எழுபத்தைந்து சதவிகிதம் உயிரும் அறிவும் வேலை செய்ய, இருபத்தைந்து சதவிகிதம் உடல் வேலை செய்ய வேண்டும். உடல் வேலை அதிகம் இல்லை.

ஞானம் என்பது பரம்பொருளோடு ஒன்றிய அறிவு நிலை. இது நூறு சதவிகிதமும் தான்வேறு, சிவம் வேறு என்று எண்ணாமல் அறிவால் ஒன்றி இருப்பது.

இத்தகைய சரியை, கிரியை, யோக, ஞானங்களை முறையே அரும்பு, மலர், காய், கனி என விளக்குகின்றார் தாயுமானவத்

''விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனி போல் அன்றோ பராபரமே.''

என்பது பராபரக்கண்ணி.

இங்ஙனம் சைவ நாற்பாதங்களையும் தக்க மேற்கோள்களோடு எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கிச் சைவ சித்தாந்த நெறியை அன்பர்கள் உணர விளக்கம் செய்தமை சிறப்பாக அமைந்தது.

கணநாதர், சீகாழியில் திருஞான அமுது உண்டருளிய ஞானசம்பந்தரைத் தம்குருவாகக் கொண்டவர். அவர் திருவடிகளை அன்போடு நினைந்து முப்போதும் வழிபட்டவர்.

திருஞானசம்பந்தரை எந்நாளும் வழிபட்டமையால் நன்மைகள் பல எய்தப்பெற்றார். திருக்கயிலை அடைந்தார்; சிவகணங்களுக்கு நாதராகிய சிவபிரானின் வழித்தொண்டிலே நிலைபெற்றார் - என வரலாறு அருளி, குருவருள் ஆன்மாக்களுக்குச்செய்யும் நன்மைகளை உணர்த்தியருளினார்கள்.

சீகாழி, தெற்குவீதியில் கணநாதர் கோயில் உள்ளது. இது அவர் வாழ்ந்த இடத்தைக் குறிப்பது; சீகாழிக்கோயிலில் - திருஞானசம்பந்தர் கோயிலின் முன்புள்ள பலிபீடக்கோயில் அவர் முத்திப்பேறு எய்தியதைக் குறிப்பது என்றும் இந்நாயனார் பெயர்க் காரணம், இவர் முத்திப்பேறெய்திய பிறகு சிவகணங்களுக்குத் தலைவரானார். அதுகாரணமாகவே இவர்கணநாதர் எனப்பெற்றார். இயற்பெயர் தெரிந்திலது என்றும் மலர் தொடுத்தல் முதலிய சரியைத் தொண்டிலும், திருமுறை எழுதுதல் வாசித்தல் முதலிய ஞானத் தொண்டிலும் அடியவர்களை ஈடுபடுத்திய ஞானாசிரியராகத் திகழ்ந்தார் என்றும் அரிய செய்திகளை வழங்கிப், புதிய சிந்தனை விருந்து படைத்து மகிழ்வித்தார்கள்.

சைவசித்தாந்தச் செறிவோடு அமைந்த அருளுபதேசம் நிறைந்தது. பண்டாரக்கட்டிற்கு வெளியே கனிக்சாறுகாத்திருந்தது. அலுவலக அன்பர்கள் மனம் மகிழ்ந்து அளித்தனர்; தாக சாந்தி பெற்றோம். அரிய கருத்துக்களைச் சுமந்து இனிய நினைவுகளோடு இல்லம் ஏகினோம்.

''சரியை தனைக்காட்டிச் சற்குருவின் தாள்காட்டி
நெறிகாட்டி உய்விக்கும் நீடுபுகழ்க் குருவாழி!''

வாழ்க குருமணிகள்!

ஸ்ரீ சொக்கலிங்கமும் ஸ்ரீ குமரகுருபரரும்

நெல்லை சிவமணி
புலவர் திரு. ம. சிவசம்பு, எம். ஏ.,
பாளையங்கோட்டை.

ஸ்ரீ குமரகுருபரர் தம் ஞானாசிரியர் மாசிலாமணி தேசிகர் அருளைப் பெற்ற அன்புமிகுதியால் பக்தி நனிசொட்டச் சொட்டப் பண்டார மும்மணிக்கோவை பாடினார். அந்நூலைப் படிக்குந் தோறும் படிக்குந்தோறும் இன்பம் பெருகும். அந்நூலினைத் தொட்டால் கைமணக்கும்; படித்தால் வாய்மணக்கும்; கேட்டால் செவிமணக்கும்; நினைத்தால் நெஞ்சு இனிக்கும். அந்நூலில் குமரகுருபரர் தம் குருபக்தியை மட்டுமா வெளிப்படுத்தி யிருக்கிறார்! தருமைத் திருமடத்தின் மரபுகளையெல்லாம் வெளிப் படுத்தி இருக்கிறார்.

தருமை ஆதீனத் திருமடத்தில் மிகவும் சிறப்பானது சொக்கலிங்கப் பெருமான் பூசை. அருமையும் பெருமையும் வாய்ந்த பூசைமடத்தில் நடைபெறும் சொக்கலிங்கப்பெருமான் பூசையைக் காணக் கண்கோடிவேண்டும். அத்தனை அழகு! பழைய பண் முறையில் ஓதுவாமூர்த்திகள் திருமுறைகளைப் பாடுவதும், சொக்கலிங்கப்பெருமானுக்கு அபிடேகம் ஆவதும் கண்டும்கேட்டும் மகிழத்தக்க காட்சிகளாகும். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தீபாராதனை செய்யும் அழகைச் சொல்ல நாவுக்கு ஏது சக்தி? நேரில் கண்டுதான் ஆனந்திக்கவேண்டும். பூசை நேரத்தில் தம்பிரான்களும் மற்ற அடியவர்களும் தவறாமல் பூசையில் கலந்து தெரிசித்து மகிழ்வர். இக்காட்சியை இன்றும் கண்டு களிக்கலாம்.

300 ஆண்டுகளுக்குமுன் தருமை ஆதீனம் பூசைமடத்தில் 4 ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள் சொக்கலிங்கப் பெருமானுக்குப் பூசை செய்கிறார்கள். பதினாறுவகை உபசாரத்துடன் பூசை மிகவும் சிறப்பாக நடை பெறுகிறது. ஆயும் பழைய அடியார் கூட்டத்தின் நடுவே நம் குமரகுருபர சுவாமிகள் மெய்ம்மறந்து தெரிசனம் செய்கிறார். அங்கயற்கண்ணி பங்கில் வீற்றிருந்த செக்கர் வார்சடைச் சொக்கநாயகனைக் கண்டு மகிழ்கிறார். தம் ஞானதேசிகர் செய்த பூசனைச் சிறப்பை எண்ணி எண்ணி மகிழ்கிறார்.

ஓதுவாமூர்த்திகள் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பாடிய

" ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியாம்
மத்தனே கூடல் மதுராபுரி உமையாள்
அத்தனே ஆலவா யா "

என்று சொக்கநாத வெண்பாவைப் பாடி முடிக்கிறார். தம் ஞான தேசிகர் பூசையின் சிறப்பை, தருமைத் திருமடத்தின் மரபைப் பண்டார மும்மணிக்கோவையில்;

" அங்கயற் கண்ணி பங்கில் வீற்றிருந்த
செக்கர் வார்சடைச் சொக்கநாயகனை
ஈரெண் திறத்து உபசாரமும் வாய்ப்பப்
பூசனை புரியும் தேசிக ராய! "

என்று போற்றி மகிழ்கிறார்.

அன்று மதுரையில் கண்டு வணங்கிய புழுகுநெய்ச் சொக்கரை, அபிடேகச் சொக்கரை, கர்ப்பூரச் சொக்கரை, அழகிய சொக்கரை, கடம்பவனச் சொக்கரை, அங்கயற்கண் தழுவிய சங்கத் தமிழ்ச் சொக்கரைத் தருமையிலும் கண்டு இன்புற்றோர் என்று அறிந்து மகிழ்கிறோம்.

"ஞானசம்பந்தம்"

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திலிருந்து வெளி வருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது, சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	...	ரு.	17—00
ஆண்டுச் சந்தா (சிலோன்)	..	ரு.	45—00
ஆயுள் சந்தா (உள்நாடு)	...	ரு.	175—00
ஆயுள் சந்தா (வெளிநாடு)	...	ரு.	450—00
தனிப் பிரதி விலை	...	ரு.	1—50

செயலாளர் :— ஞானசம்பந்தம் செயலகம், தருமபுரம்,
மயிலாடுதுறை 609 001, தஞ்சை மாவட்டம்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு விபவ ஆண்டு பங்குனித் திங்கள் 6 ஆம் நாள் 19—3—89 நெடுவாயில் ஸ்ரீ சௌந்தரேசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. தஞ்சைமாவட்டம் திருவிடைக்கழி என்னும் முருகன் தலத்திற்கு அண்மையில் உள்ளது இத்தலம். இது திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருக்ஷேத்திரக் கோவையில் இடம்பெற்ற தலமாகும். தலச்சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப் புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., அவர்கள் உரையாற்றினர். பக்தர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாத முதல் ஞாயிற்றுக் கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசப் பெறும் பிரார்த்தனைக்கூட்டம் நிகழ்கின்றது. இம்மாதம் 94 ஆம் அருளுபதேசம் 2—4—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடைபெற்றது.

முதலில் குடவாயில் திரு. பாலசுப்பிரமணியன் அடியார் பெருமைகளைக் கல்வெட்டு மற்றும் இலக்கியச் சான்றுகளுடன் விளக்கி உரை நிகழ்த்தினர். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகக் கூற்றுவ நாயனர் புராணத்தை உபதேசித்தருளினர்கள். முதலில், கணநாதர் புராணச்சுருக்கம் மீண்டும் அருளிச் சில விளக்கங்கள் நல்கினர்கள். அருளுபதேச அங்கமாகத் திருமுறைப் பாராயணம் நடைபெற்றபோது பாடப் பெற்ற தேவாரத்தில் அமைந்த தொடராகிய 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்' என்ற தொடருக்குத் தெளிவான சீரிய விளக்கம் நல்கினர்கள்.

தருமை ஆதீன அடியார்கள் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் முதலியோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். அடுத்து 95 ஆம் அருளுபதேசம் 7—5—89 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன் பெறுவார்களாக.

பங்குனித் திங்கட் பெருவிழா

வேளூரில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில் என வழங்கும் வேளூர் ஸ்ரீவைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் 13—3—89 திங்கட்கிழமை தொடங்கிப் பத்து நாட்கள் பங்குனி உத்திரத்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், சகோபுரக் காட்சி, திருத்தேர்த்திருவிழா, தீர்த்தவிழா ஆகியவை சிறப்புத் திருநாட்களாகக் கொண்டாடப் பெற்றன. 16—3—89 வியாழக்கிழமை திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நிகழ்ந்தது. தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் தலைமை எற்றுப் பரிசுகளை வழங்கி 'திருவிசைப்பா' என்னும் பொருளில் உரைநிகழ்த்தினர். தேவாரம், 'திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், திருப்புகழ் ஆகிய தலைப்புகளில் தக்கபுலவர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன.

பேரளத்தில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீசுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத் திருநாள் 22—3—89 புதன்கிழமையன்று நடைபெற்றது. காலை பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் அக்னிபுஷ்கர்ணி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும் நடைபெற்றன. இரவு திருவீதிவுலா நடைபெற்றது. புலவர் திரு. கே. கணபதி, பி. லிட்., பி. எட்., 'பார்வதி திருமணம்' என்னும் பொருளில் சொற்பொழிவாற்றினர். பக்தர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

நந்தியெம் பெருமான் திருக்கல்யாண விழா

சிலாத முனிவரின் புதல்வராய், தவப்பயனால் அவதரித்து, தவம் இயற்றிய நந்திதேவருக்கு, இறைவன் கங்கை நீர் முதலிய ஐவகை நீராலும் அபிஷேகம் செய்வித்து, தீட்சையும் அருளித் திருமழபாடிக்கு எழுந்தருளி, வசிட்ட முனிவரின் மகளாகிய சுயசாம்பிகையைத் திருமணம் செய்வித்து, பஞ்சபூதப் பிரதட்சணமாகத் திருவையாற்றுக்கு எழுந்தருளும் விழா 15—3—89 புதன்கிழமை அன்று தருமை ஆதீனம் திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருநந்தியெம்பெருமான் திருக்கல்யாண விழா 16—3—89 வியாழனன்று நடைபெற்றது. பக்தர்கள் தரிசித்துப் பயன்பெற்றனர்.

ஒட்டங்காடு அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

மகாகும்பாபிஷேக விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்தைச் சார்ந்த ஒட்டங்காடு அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் ஜீரணோத்தாரண, அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக விழா 17—3—89 வெள்ளிக்கிழமை காலை மிகச் சிறப்பாக நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந்தருளியிருந்து முன்னின்று நிகழ்த்தி வழிபாடாற்றினார்கள்.

மகாகும்பாபிஷேகத்தை ஒட்டி 16—3—89 அன்று மாலை பட்டிமண்டப நிகழ்ச்சியும் இரவு 10-00 மணியளவில் வீடியோவில பத்திப்படக் காட்சியும நடைபெற்றன.

17—3—89 வெள்ளிக்கிழமை காலை மகாகும்பாபிஷேக நிறைவில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அன்பர்களிடையே அருளாசிவழங்கினார்கள். பக்தர்களுக்குக்கும்பாபிஷேகப் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

அன்று மாலை மாரியம்மன் அருள் வரலாறு பற்றியும், அபிராமி பட்டர் அருள் வரலாறு பற்றியும் சொற்பொழிவு நடைபெற்றது. இரவு 9-30 மணி அளவில் வீடியோவில் பக்திப்படக்காட்சி காண்பிக்கப் பெற்றது. பக்தர்கள் கும்பாபிஷேக தரிசனம் செய்தும் அருள்மிகு மாரியம்மனைத் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

தருமை ஆதீனம் அருள்மிகு சச்சிதானந்த விநாயகர் வடக்குக் குருமூர்த்த ஆலயங்களின்

மண்டலாபிஷகப் பூர்த்தி விழா

தருமை ஆதீனம திருமஞ்சன வீதியில் அமைந்துள்ள அருள்மிகு சச்சிதானந்த விநாயகர் திருக்கோயில் மற்றும் அதைச் சார்ந்து அமைந்துள்ள பதினைந்து குருமூர்த்த ஆலயங்களின் கும்பாபிஷேக விழா, ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நினைவாக 29—1—89 ஞாயிறன்று காலை 10-00 மணிக்கு மேல் 11-00க்குள் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

அக்குடமுழுக்குப் பெருவிழாவினையொட்டி, நடைபெற்று வந்த நாற்பத்தைந்து நாள்) மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா 14—3—89

செவ்வாய்க்கிழமை காலை 12மணி அளவில் சிறப்பாக நடைபெற்றது. தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப்பாங்கின் வண்ணம் ஸ்நபனங்கி வேள்வியும், அபிஷேக ஆராதனைகளும் சிறப்பாக நடைபெற்றன. அன்று மாலை வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ. பி. எட்., "மண்டலாபிஷேகச் சிறப்பு" பற்றி விரிவுரை நிகழ்த்தினர். அன்பர்கள் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் கலந்துகொண்டு தரிசித்து இன்புற்றனர்.

தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர்கழக ஆண்டுவிழா

31—3—89 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி முதல் தருமபுர ஆதீனம் கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர்கழக ஆண்டுவிழா, தமிழ்மாமுனிவர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 300 ஆவது ஆண்டு நிறைவு நினைவு விழாவாகச் சிறப்புற நடைபெற்றது.

மாணவர்கழக ஆண்டு விழாவுடன், விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்புவிழா, நாட்டுநலப்பணித் திட்ட நிறைவுவிழா, கல்லூரிப் பேராசிரியர்களுக்கான தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் அவர்களுக்குப் பாராட்டுவிழா முதலியனவும் இணைத்து நிகழ்த்தப்பெற்றது. மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் திரு. இரா. வேலு, பி. ஏ., அவர்கள் விழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை ஏற்றுப் பரிசுகள் வழங்கினர். ஆக்கூர் அரசு உயர்நிலைப் பள்ளி டாக்டர் திரு. சிவசங்கரன், எம். ஏ., பி. எச்டி., அவர்கள் முற்பகல் வழக்காடு மன்றத்திற்குத் தலைமை ஏற்றார். மயிலாடுதுறை அ. வ. அ. க. கல்லூரி, தமிழ்த்துறைப் பேராசிரியர், நல்லாசிரியர் செஞ்சொற்கொண்டல் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ., பிஎச், டி., அவர்கள் பிற்பகலில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவு நினைவு விழாப் பேருரையாற்றினர், கல்லூரி முதல்வர், மற்றும் பேராசிரியர்கள் நல்லாசிரியருக்குப் பாராட்டுரை வழங்கினர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கிலஹூ சித்திரைமீ 1உ முதல் 30உ முடிய)

(14—4—89 முதல் 13—5—89 முடிய)

கலியுகம் 5090 சுக்கிலஹூ கலிசுத்ததினம் 1859164 நாள் 32 நாழிகை 11 விடிை 15 தர்பறை. இதை 7 ஆல் வகுத்து வந்த தினம் சுக்கிராதியாய் 7 ஆவது தினத்தில் அதாவது குருவாரத்தில் பங்குனி மாதம் 31உ சூரிய உதயம் முதல் 32 நாழிகை தர்பறை நீங்கலாக 11 விடிைக்குப் பூசநக்ஷத்திரம் துலா லக்கினத்தில் ஸ்ரீ உலகரட்சகரான சூரியபகவான் மீன ராசியிலிருந்து மேஷ ராசி சங்கிர மணமாக சௌரமான சுக்கிலஹூ சித்திரை மாதப் பிரவேசம் செய்கருளுகின்ருர். அன்று விஷுபுண்ணிய காலம். மறுதினம் சுக்கிரவாரம் சித்திரைமீ முதல் தேதியாகும்.

நவ நாயகர்கள் :- இராஜா சுக்கிரன், மந்திரி குரு, அர்க்காதிபதி குரு, ஸஸ்யாதிபதி சூரியன், சேனதிபதி குரு, இரஸாதிபதி செவ்வாய், தானியாதிபதி சனி, மேகாதிபதி குரு, நீரஸாதிபதி சூரியன் இவர்கள் சுக்கிலவருஷத்திற்கு விண்ணில் இருந்து பூலோகத்தை இரட்சிப்பவர்களாகிருர்கள்.

ஈஸ்வரனனுக்கிரகத்தினுல் இவ்வாண்டுக்கும் மந்திரியாகிய குருவே அதிக ஆதிபத்தியம் ஏற்றுவருகின்ருர். அதனுல் நல்ல மழை தானியங்கள் அபிவிருத்தி பசுக்கள் விருத்தி ஏற்படும். மக்கள் கல்வி அறிவில் சிறந்து கலை ஞானம், மறை ஞானம், சாஸ்திர ஞானம், சகலகலா ஞானங்களில் மிளிர்வார்கள். நாடுகளில் எங்கும் பொதுநலச் சேவைக்குழு அமைந்துப் பிரஜைகள் அரசு அறிவிப்பு நன்மைகள் பலனடைவார்கள். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வரனருளினுல் சிவசமயம் பரிபாலிப்பு கர்த்தாக்களாகி வந்துள்ள சிவகுருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள் ஜெகத்குருமகான்கள் இப்புத்தாண்டின் படியில் எழுந்தருளி உலகத்திற்குப் பொன்னெடுபதிவுற ஈஸ்வர மகத்துவம் தம்திருவாய் மலர்ந்து பொன்மொழிகளால் விளம்பி அருள்வார்கள். பக்தர்கள் சிவநேயர்கள் செல்வர்கள் இராஜபிரமுகர்கள் எல்லோருக்கும், அருட்பிரசாதம் வழங்கித் திருவருள் பெற்று உயர

ஆசீர்வதித்து அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் சைத்ரோத்ஸவங்கள் தெய்வ ஆராதனைகள் ஆலய நிர்வாக உத்தமவான்க்களின் தெய்வ புனிதசேவையினால் விமரிசையில் நடக்கும். ஐதிகபரோபகார வைபோக,நிகழ்ச்சியாகத் தெய்வீக பரதநாட்டியம் கதாகாலட்சேபம் நடைபெறும். கீதவாத்திய முழக்கத்துடன் வேதபாராயனம் ஈஸ்வரஸ்தோத்திர பாடல்கள் ஒலிக்க பஞ்சமூர்த்திகளின் வீதியுலாக்காட்சி இனிது நடைபெறும் ஆலயப்செல்ல இயலாத வயோதிகர்கள் ஸ்திரீகள் எல்லாப்பிரஜைகளும் ஈஸ்வரனைத் தரிசித்து பக்தி பரவசமாவார்கள்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷ ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் பெருமதிப்பில் வரவாகும். பொது நலச் சேவையில் ஊக்கம் மிகும். உறுதிவாக்களித்தல் ஏப்ரல் 26க்கு மேல் நல்லோர் அவையில் உரை நிகழ்த்துதல் ஆகும். நீதிநூல் எழுதுதல், ஓர் நவீன சாதனம் கையாளுதல் ஆகும், வாகனசுகம், திருப்தியளிக்கும். புத்திரர் மித்திரர்களினால் சந்துஷ்டி நிலைமையாகும். தாம்பத்திய வாழ்வில் சொகுசு ஏற்படும். ஏப்ரல் 23, 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம.

சுக்கிலனுல் இராசி ஆதாயம் 2. விரயம் 8. ஆரோக்கியம் 9. அனாரோக்கியம் 4. இராஜபூஜிதம் 4. இராஜகோபம் 2. சுகம் 6. துக்கம் 3.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் சீராக இருப்பினும் கௌரவஸ்திதியில் சுபவிசேஷங்களை நடத்தச் செய்யும். டாம்பீகம் அல்லது வைராக்கியத்தில் அவசிய விஷயங்களில் செலவும் முதலீடு செய்தலும் ஆகும். எல்லா இக்கட்டான நிலையிலும் ஈசனருளில் சிரமம் நீங்குவதாகிய பிரயாசைக்கு ஏற்றபலனைத்தரும். சனிபகவானுக்குத்திலத்தீபம் ஏற்றவும். தாரபுத்திரர்களின் நன்றாக இருந்து வரும். மே 7ல் நல்ல பிரயோஜனம் தரும். ஏப்ரல் 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

சுக்கில னுல் இராசி ஆதாயம் 11. விரயம் 14. ஆரோக்கியம் 3. அனாரோக்கியம் 1. இராஜபூஜிதம் 6. இராஜ கோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் வரும். அதற்கேற்ப சுப விசேஷ செலவினங்களும் செய்யும். வித்துவத்துவம் கலைத்துறையில் நற்பலனை ஏற்படுத்தும். பொது நலப் பணிகளில் சிறப்பு உண்டாகும். நவீன வாகனம வாங்குதல் ஆகும்.

புத்திரர்புத்திரிகள் நலனில் பொருள் முதலீடுசெய்யும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் நடந்து வரும். ஏப்ரல் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். மே 7ல் ஓர் தர்மம்செய்யும். ஞாயிறு, திங்கள் சுபம்.

சுக்கில வருட இராசி ஆதாயம் 14. விரயம் 11. ஆரோக்கியம் 5. அனாரோக்கியம் 2. இராஜபூஜிதம் 3. இராஜ கோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அரசாங்கத்திற்கு ஏற்ப வரவாகிக் கொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் அரசாங்க கௌரவம் தரும். நூல்படைப்புச் செய்தல் கலாபரிச்சய உயர்வு அரங்கேற்று சம்பவம். ஆகிய நற்பலன் ஏற்படச் செய்யும். அவசியமிக்க எல்லா அலுவல்களிலும் தெய்வபலன் முன்னின்று நடத்தச் செய்யும். வழக்குகளில் ஜெயம் தரும் ஓர் நல்ல வாகனம் தரும். தார புத்திரர்களுக்கு சௌக்கியபலன் தரும். ஏப்ரல் 30 மே 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

சுக்கிலவருட இராசி ஆதாயம் 14. விரயம் 2. ஆரோக்கியம் 2. அனாரோக்கியம் 5. இராஜபூஜிதம் 1. இராஜகோபம் 2. சுகம் 2. துக்கம் 3.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கண்யஸ்திதிக்கு ஏற்ப வரும். ஏப்ரல் 26 தேதி ஆனால் வித்தியா வியாபாராதிகளில், கலைத்துறையில் நற்பலன் உண்டு பண்ணும். எல்லாக்காரியங்களும் புத்திமேம்பாட்டில் சிறப்பாக நடந்து கொண்டிருக்கும். வாகன சுகம் திருப்தியளிக்கும். புத்திரர் பௌத்திரர்களினால் மகிழ்ச்சி தரும். மே 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். ஏப்ரல் 14, 15, மே 11, 12 தேதிகளில் சுப விஷய செலவு ஏற்கும். வெள்ளி, சனி சுபம்.

சுக்கில வருட இராசி ஆதாயம் 11. விரயம் 5. ஆரோக்கியம் 7. அனாரோக்கியம் 1. இராஜபூஜிதம் 1. இராஜ கோபம் 2. சுகம் 6. துக்கம் 3.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கௌரவஸ்திதியில் வந்துக்கொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் பிரசித்தம் ஏற்படும். அரசாங்கத்திலிருந்து நல்ல விஷய கடிதம் வரும். சுமந்துள்ள அலுவல்கள் அனைத்தும் விரைவில் செயல்பட்டுக் கொண்டிருக்கும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வருதும். மே 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

சுக்கில ஞூ இராசி ஆதாயம் 14. விரயம் 11. ஆரோக்கியம் 5. அனுரோக்கியம் 2. இராஜபூஜிதம் 3. இராஜகோபம் 5. சுகம் 6. துக்கம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் பெருமதிப்பில் வரவாகும். வித்துவத்துவம் கலைத் துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் ஏப்ரல் 18 தேதியில் ஓர் உயர்வு தரும். பணலேவாதேவியில் ஒப்பந்த பத்திரங்களில் விசேஷ பலனை உண்டு பண்ணும். எல்லாக் காரியங்களையும் நல்ல விதமாகச் செயல் படுத்தும். ஓர் தர்ம காரியத்தில் பொறுப்பு ஏற்கும். தாரம்புத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். மே 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

சுக்கில ஞூ இராசி ஆதாயம் 11. விரயம் 14. ஆரோக்கியம் 3. அனுரோக்கியம் 1. இராஜபூஜிதம் 6. இராஜகோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

8 விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பண வருமானம் கெடியான தோரணைக்கு ஏற்பவரும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் அரசாங்க நன்மை ஏற்பட்டுவரும். இயந்திரசாதனத்தில் முதலீடு ஆகும். எல்லா அரிய பெரிய காரியங் களும் திருச்செந்திலாண்டவன் துணையால் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மே 8, 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

சுக்கிலஞூ இராசி ஆதாயம் 2. விரயம் 8. ஆரோக்கியம் 6. அனுரோக்கியம் 4. இராஜ பூஜிதம் 4. இராஜ கோபம் 2. சுகம் 6. துக்கம் 3.

9 தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் நிரம்ப வந்து சேரும். வித்துவத்துவம் கலைத்துறையில் ஏப்ரல் 26இல் நல்ல பிரயோஜனம் வரும். உத்தியோகம் மற்றும் பிரவிருத்திகளில் உயர் ஸ்திதியாகும். பந்துமித்திரர்களின் வருகை புத்திரர் பௌத்திரர்கள் நலம் இவற்றில் மன மகிழ்ச்சியாகும். எல்லாக்காரியங்களையும் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் செயல் படுத்தும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் நடக்கும். குல தெய்வத்திற்குப் பூசை செய்தல் ஆகும். ஏப்ரல் 14, 15 மே 11, 12 இத்தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

சுக்கிலனூல் இராசி ஆதாயம் 5. விரயம் 14. ஆரோக்கியம் 4. அனுரோக்கியம் 5. இராஜ பூஜிதம் 3. இராஜ கோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். உடன் அவசிய செலவினங்களும் ஏற்படும். நவீன விடுவாகனம் இவற்றின் பிராப்தியளிக்கும். எல்லா நெருக்கடி பிரச்சினைகளிலும் தெய்வபலன் முன்னின்று காக்கும். ஜீவனோபாயம் உத்தியோகம் இவற்றில் அரசாங்கத்தில் நல்ல வாய்ப்பு ஏற்படும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஏப்ரல் 16,17 மே 13 இத்தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

சுக்கில னூல் இராசி ஆதாயம் 8. விரயம் 8. ஆரோக்கியம் 7. அனுரோக்கியம் 3. இராஜபூஜிதம் 7. இராஜ கோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் அரசனுயமாக வரும். பொன்மணி பூஷணம் தரும். நவீன இயந்திர சாதனம் தரும். இல்லத்தில் சுப விசேஷம் நடக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் ஏப்ரல் 26க்கு மேல் நன்மைகள் ஏற்படச் செய்யும். எல்லாக் காரியங்களும் நல்ல விதமாக நடந்து கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஏப்ரல் 18, 19, 20 இத்தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

சுக்கிலனூல் இராசி ஆதாயம் 8. விரயம் 8. ஆரோக்கியம் 7. அனுரோக்கியம் 3. இராஜ பூஜிதம் 7. இராஜ கோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். அதற்கேற்ப அரசுத் தொடர்பு செலவினங்களும் ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்பு தரும். அன்புக்குரியவர் அல்லது நெருங்கிய தொடர்புடையவர் மனஸ்தாபத்தில் சிறிது காலம் விலகி இருப்பர். பூர்வ பொருளில் ஓர் சிக்கல்காணும். தாரம்புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஏப்ரல் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

சுக்கிலனூல் இராசி ஆதாயம் 5. விரயம் 14. ஆரோக்கியம் 4. அனுரோக்கியம் 5. இராஜ பூஜிதம் 3. இராஜ கோபம் 5. சுகம் 6. துக்கம் 3.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவ சமயக் கல்வி-V
பாடம் - 3.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகரின்
திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :

பண்டார சாத்திரங்கள் :

ஸ்ரீ காசி காலபைரவர் திருவருட்பா
ஸ்ரீ காசி தாரகப் பத்து

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி
எம். ஏ , பி. எட்., பிஎச். டி.,

முன்னுரை :

தருமை ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளிய பதினாறு அருட்பனுவல்களுள் ஐந்தாவதாகவைத்து எண்ணப்படும் ஸ்ரீகாசி காலபைரவர் திருவருட்பா, ஆறாவதாக வைத்து எண்ணப் படும் ஸ்ரீ காசி தாரகப்பத்து ஆகிய இரண்டு சிறு நூல்களைப் பகுப் பாய்வு செய்யும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது. நூல் அமைப்பு, உள்ளீடு, திறனாய்வு என்ற மூன்று நிலையில் நூல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

ஸ்ரீ காசி காலபைரவர் திருவருட்பா :

ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் காசியில் அருளிச் செய்த அருட்பனுவல்கள் பத்து. அவற்றுள் காசி மாநகரில் தனிக்கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ பைரவமூர்த்திகளைப் போற்றித் துதிக்கும் அமைப்பில் பதினொரு பாடல்களும் பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களால் பாடப்பெற்றுள்ளன. பத்துப்பாடல் களால் அமைந்துள்ள ஒரு நூலுக்கு ஆசிரியர் ஸ்ரீ அசபா நடனப் பதிகம் என்று பெயரிடுகிறார். வேறு ஒரு அருட்பனுவலில் ஸ்ரீ காசி

தாரகப் பத்து என்று பத்துப்பாடல்கள் கொண்ட சிறுநூலுக்குப் பெயர் சூட்டுகிறார். பத்து மற்றும் பதினொரு பாடல்களால் இயன்ற தம் நூலுகளுள் சிலவற்றிற்குத் 'திருவருட்பா' என்றும் ஒன்றற்குப் 'பதிகம்' என்றும், பிறிதொன்றற்குப் 'பத்து' என்றும் பெயர் சூட்டியிருப்பதற்கான காரணம் இனிது விளங்கவில்லை.

கால பைரவர் :

திராவிட மொழிகளில் வழங்கும் வகரம், சமஸ்கிருதம் உள்ளிட்ட இந்தோஐரோப்பிய மொழிகளில் பகரமாக உச்சரிக்கப் பெறும். வங்காளம் என்பது ஆங்கிலத்தில் பெங்கால் என்று குறிக்கப்படுவது ஒரு சான்று. அதுபோல் தமிழில் 'வைரவர்' என்ற சொல் வடமொழியில் 'பைரவர்' என்று வழங்கப்பெறுகிறது. வயிரவக்கடவுள் என்றும் தமிழில் எழுதப்பட்டுவருகிறது. ஆசிரியர் 'கால வயிரவ நாதனே' என்று பாடல் தோறும் வயிரவர் என்றே குறித்துச் செல்கின்றார். 'பைரவர்' என்பதற்கு அபிதான சிந்தாமணி, "தக்ஷன், விஷ்ணு, பிரமாதிகளுக்கு அலங்காரம் மேலிட்ட காலத்து, அவர்களைச் சிவாக்ஞையால் சிக்ஷித்து அநுக்கிரகித்த சிவாவசரம். இவருக்கு வேத உருவமாகிய நாய் வாகனம். இத்திருநாமத்து ப, ர, வ சிருட்டியாதி முத்தொழில்களை உணர்த்துவது" எனப் பொருள் விளக்கம் தருகிறது.

வைரவர் திருவுருவம் :

வைரவர் திருவுருவம் கோரமூர்த்தமாகும். இவர் செஞ்சடையும், முக்கண்ணும், நீலநிறத்திருமேனியும் கொண்டவர். சூலம், பிரமகபாலம், பாசம், உடுக்கை ஆகியவற்றை ஏந்திய நான்கு திருக்கரங்களைக் கொண்டவர். வக்கிர தந்தங்களும், கோபக் குறிப்போடு கூடிய சிரிப்பும் கொண்ட திருமுகத்தினர். ஆடையணியப்படாத நிர்வாண கோலத்தர். இவர் சத்துவ குணத்தில் தாமச குணத்தர். சங்காரருத்திரர் எனவும், க்ஷேத்திர பாலர் என்றும் வழங்கப் பெறுவர். (க்ஷேத்திரம் - கோயில், பாலர் - பரிபாலிப்பவர்) சிவத்தினின்றும் தோன்றிய காரணத்தால் சிவகுமாரராகவே இவர் கருதப் பெறுகிறார்.

வைரவக் கடவுளைப் பின்பற்றும் பரிவாரங்களும், சிறு தெய்வங்களும் வைரவ நாமமுடையன. இரவு பள்ளியறை மூடியவுடன் வைரவருக்கு வழிபாடியற்றி அவரது பரிவாரங்களாகிய

வேதாள கணங்களுக்குப் பலி போடப்படுகின்றன. வைரவருக்கு, ஊரின் பாதுகாப்புப் பொருட்டும், துன்ப நீங்கத்தின் பொருட்டும், பிணிநீக்கத்தின் பொருட்டும் பாயசான்னத்தால் பலி சமைக்க வேண்டுமென்று ஆகமங்கள் குறிக்கின்றன.

வைரவ விரதங்கள் பல. மங்கள வார விரதம், சித்திரைப் பரணி விரதம், ஐப்பசிப் பரணி விரதம் என்பன வைரவ விரதங்களுள் குறிக்கத் தக்கன. தை முதற்செவ்வாய்த் தொடங்கி நிகழ்த்தப் பெறுவது மங்கள வார விரதம். நந்தியாவர்த்தம் தவிர எஞ்சிய பூக்கள் வைரவர் பூஜைக்குரியன. நிவேதனமாக வடை மாலை சார்த்துவதும் உண்டு.

காலவைரவர் திருவருட்பா உள்ளீடு :

பதினொரு பாடல்களில் முறையே நூலாசிரியர் காலவைரவர் திருவுருவம், வல்லமை, பேராற்றல், இயல்புகள், சங்காரம் பெருவலி, அருளிப்பாடு, ஆசிரியர் அழைப்பு, வைரவர் எளிமை, கருணைக்கொடை, தமதுவேண்டுகோள் என்பனவற்றைஉள்ளீடாக அமைக்கிறார். பாடல்கள் யாவும்,

> " காசியெனும் ஒருவார ணசிநக ரானந்த
> காலவயிரவ நாதனே "

எனவேநிறைகின்றன. சிவபெருமானின் அட்டவீரட்டச்செயல்கள் பலவும் வயிரவர்க்கு ஏற்றி உரைக்கப்பட்டுள்ளன. பிரமதேவன் தலைகளில் ஒன்றைக்கிள்ளி எடுத்தமை, தக்கனைத் தடிந்தது, சண்டனை உதைத்தது, ஆனையை உரித்தது முதலிய செய்திகள் இடையிடையே குறிக்கப்படுகின்றன. வைரவரை, 'வயிரவன்', 'வடுகன்', 'தண்டபாணி' முதலிய பெயர்களாலும் ஆசிரியர் அழைக்கிறார்.

அரிய தொடர்கள் :

கால வைரவர் திருவருட்பாவில் பல அரிய தொடர்கள் இடம் பெற்றுள்ளன. குரு,லிங்க,சங்கமம்என்னும் முத்திறவழிபாட்டைச் சைவம்பெரிதும்வற்புறுத்தும். இவ்வழிபாடுகளைத்தப்பியோர்க்குச் சிவபிரான் வைரவராக எழுந்தருளி வழங்கிய தண்டனைகளை,

" குருதூடணம் பண்ணுவோர் பயந்துய்யவே
கோகநத ஞேர்சிரத்தைக்
கொய்து செங்கையிற் பிடித்து நின்ருயருட்
கோயிலுறை லிங்கவடிவில்
தருநேச மில்லாதபேர் பயந்துய்யவே
சண்டனை யுதைத் தடித்தாய்
சங்கமத் ரோகிகள்பயந்திடப் பச்சைமால்
தனையுரித்தே தரித்தாய் "

என்ற வரிகளில் அழகுற ஆசிரியர் பதிவுசெய்து காட்டுகின்ருர். வைரவன் முன் வந்து தம் தமருகம் முழக்கினுல் அடியார்களுக்குக் கைகூடும் பேறுகள் பலவற்றை,

"புலிகரடி முதலான மிருகமும் பேய்களும்
பொல்லாத மாதர்மயலும்
பொறியரவ முதலான துட்டசெந் துக்களும்
பொங்கியெழு எமதூ தருஞ்
சிலேவேடர் முதலான தி நடரும் படைகளும்
தினகராதியர் தோடமுந்
தேசமுறு பிணிகளும் சித்தமுறு பிணிகளும்
சீவன்மே லுறுபிணிகளும்
நிலநீர் நெருப்புவளிவானினுல் வருமிடறு
நில்லாம லோடஎன்முன்
நீங்காமல் நீநின்று தமருகம் முழங்கவே ... "

என்ற அழகிய பாடல் வரிகளால் தொகுத்துச் சுட்டுகிருர். நிறைவாகப் பதினெராந் திருப்பாடலில் கால வைரவனை முன்னிலைப்படுத்தி, தன்னிலை எடுத்துரைத்து அருள் வேண்டிப் பாடும் பாடல் நினைந்து போற்றத்தக்கது.

" பிரினுடன் யான்மூழ்குந் தீர்த்தமெல் லாமுனது
பண்புதரு கங்கையென்பேன்;
பகரவரு முத்தலத் தெத்தலமு முத்தநின்
பத்தர்பணி காசியென்பேன்
குருலிங்க சங்கமத் தின்பூசை நின்பதங்
கும்பிடுத லென்றுரைப்பேன்
கொள்ளைமா தவமெலாம் நின்னடியர் தாள்தலைக்
கொள்வதேயென்றுகொள்வேன்

அரிபிரமர் பணிகாசி நகரையென் மரணபரி
யந்தமக லாதிருந்தே
அதிமதுர கவிமாலை யாலுனையங்கரித்
தானந்த வுல்லாசமாங்
கருணையங் கடலிற் படிந்துவிளை யாடநீ
கரைந்தருள்வ தெந்தநாளோ ... "

காசி நகரச் சிறப்புக்கள் :

'மந்தாகினி காசியெனும் வாரணசி' எனக் கங்கை நதிபாயும் காசி என்று பெறப்படும் வாரணசியை ஆசிரியர் சுட்டுகின்றார். 'ஒரு வயிரவன் காசி' என வைரவர் எழுந்தருளி அருள் வழங்கும் பெருமைமிக்கது காசி எனச் சுட்டுகின்றார். பிறவி எனும் கட்டைத் துளித்துளியாகப் பொடிபட வைக்கும் கங்கை பெருக்கெடுத்து ஓடும் காசி எனக் கங்கைக்குப் பெருமை சேர்க்கிறார். மணம் மிக்க கற்பகக் காடுவரை, பொன்மலை என உயர்ந்து நிற்கும் கோபுரங்களைக் கொண்டிலங்கும் காசி என நகர்ப்பெருமை பேசுகின்றார். இன்றளவும் காசித் திருத்தலமும், கங்கை நீராட்டும், கால வைரவர் வழிபாடும், அவர் திருவடிகளில் சார்த்தி எடுத்த காசிக் கயிறணிந்து பேறுபெறுதலும் தமிழ் மக்களால் விரும்பிப் போற்றப்பெறுவன. இவ்வாறு தமிழ் நாட்டுக்குப் பன்னூறு கல்தொலைவில் உள்ள காசித் திருத்தலத்து வைரவரை ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் போற்றித் துதித்த இப்பாமாலை தமிழில் சிறந்த வயிரவர் தோத்திரமாக விளங்குகின்றது.

ஸ்ரீ காசி தாரகப்பத்து :

ஸ்ரீ காசித் தலத்துறையும் கடவுளர் பலர் மீதும் தனித் தனிப் பாமாலை பாடிச் சூட்டிய ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் ஸ்ரீ காசி விசாலாட்சியம்மைமீது தனிநூல் ஏதும் செய்திலர். என்றாலும், ஸ்ரீ காசித்தாரகப்பத்தின் எல்லாப் பாடல்களிலும் விசாலாட்சியம்மையின் திருநாமத்தை ஆசிரியர் குறித்தருளி இதனை விசாலாட்சியம்மை தோத்திரமாகவும் எண்ண இடம் தருகிறார். எட்டுப்பாடல்களில் சிவபெருமானை,விசாலாட்சியம்மை பங்கன் என்றும், இரு பாடல்களில் 'விசாலாட்சிபங்கன்' என்றும் குறித்தருள்கிறார். கிளி முதலானவற்றைக் காசிச்சிவபிரானிடத் துத் தூதுரைத்து வருமாறு அமைந்த பத்துக் கலித்துறைகளால் இந்நூல் அமைந்துள்ளது.

தாரக மந்திரம் :

தாரகம் என்ற சொல்லுக்குப்பிரணவம் என்றும், ஒருமந்திரம் என்றும் அகராதி பொருள் விரிக்கிறது. ஆசிரியர் ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் தாரகத்தை ஒளி சேருந்தாரகம், பண்டாகுந் தாரகம், ஆவியாந்தாரகம், உறவாகுந்தாரகம், ஒன்று மறைத் தாரகம், உள்ளுயிராந்தாரகம் எனப் பல அடைமொழிகளால் சிறப்பிக்கிருர். தூதுரைக்கக்கிளி, மயில், கோகிலம், வண்டு, நாரை, பூவை, அன்னம், புரு, அன்றில் என இவற்றை அழைக்கிருர். சாசியில் உயிர் துறப்பார் செவிகளில் தாரகமாகிய பிரணவ மந்திரத்தைச் சிவபிரான் ஓதுவார் என்பது வழக்கு. 'என் நெஞ்சினுள்ளே எழுந்தருளிக் காசிப்பிரான் தாரக மந்திரத்தை ஓதுவது எப்போது எனக் கேட்டுவா' எனப் பறவைகளைத் தூது விடுவதாக இந்நூற்பாடல்களை ஆசிரியர் அமைத்தருளுகின்ருர்.

காமாட்சியம்மை சிறப்புரைத்தல்:

ஸ்ரீ காசி காமாட்சியம்மையை ஆசிரியர் பலபடச் சிறப்பித்துரைக்கிருர்.

" அளிசேர் மலர்க்கூந்தல் அம்மை விசாலாட்சி "

" வெயிலும் இரவியும் போல் விசாலாட்சி " (யம்மைபங்கன்)

" வேகவதி சூழ்காசி விசாலாட்சி "

" விண்டாங் கருட்காசி விசாலாட்சி "

" விடமா ரரவணியும் விசாலாட்சி "

" மேவுசீர்க் காசி விசாலாட்சி "

" மின்னும் உத்தரீகத்தை வீசும் விசாலாட்சி "

" விறல் கொண்ட காசி விசாலாட்சி "

" மின் திகழும் காசி விசாலாட்சி "

" வெள்விடையான் காசி விசாலாட்சி "

எனவரும் தொடர்களில் காசி நகர்ச் சிறப்பும், கங்கை நதிப் பெருமையும் கூறி விசாலாட்சியம்மையின் சிறப்புக்களைப் பலபட விரித்துரைக்கிருர்.

விசுவேசன் புகழ்ப்பாடும் வகை :

விசாலாட்சி பங்கனுகிய ஸ்ரீ காசி விசுவேசனை ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் பல்வேறு அழகிய தொடர்களால் புகழ்ந்து போற்றுகின்றார்

" காசிச் சங்கரன் "

" கயிலாயன் காசியில் வாழ் கண்ணுதல் "

" நாகம் அணி கயிலை நாதன் "

" என்தோள் முக்கண்ணன் "

" தடமார் மதிற்காசிச் சதாசிவன் "

" சேவுடையான் ஞானச் சித்தன் "

" தன்னிகராங் காசியில் வாழ் சற்குரு "

" திறல் வேலவன் தாதை சிவன் "

" குன்றமெனுங் கயிலைக் கோமான் "

" நள்ளிருளில் ஆடு அகிலநாதன் "

எனவரும் தொடர்களில் சிவபெருமானைப் பலவாறு சிறப்பிக்கும் ஆசிரியர் ஓரிடத்திலேனும் விசுவேசன் எனப் பெயர் சுட்டாதது வியப்பைத் தருகிறது.

அழகிய பாடல்கள் :

எல்லாப் பாடல்களுமே அழகிய வடிவில் அமைகின்றன. ஓதும்நாள், பகரும்நாள், செப்பும்நாள், அருளும்நாள் எனப் பல அழகிய சொற்களை ஒரு பொருளில் ஆசிரியர் அருளிச் செய்துள்ளார்.

" அளிசேர் மலர்க்கூந்த லம்மைவிசா லாட்சிபங்கன்
தளிசேர் பொழிற்காசிச் சங்கரன்பாற் சென்றெனக்குள்
ஒளிசேருந் தாரகத்தை யோதுநா ளென்றென்று
கிளியே ஒருவார்த்தை கேட்டுவந்துசொல்லுவையே "

என்றும்,

" மின்னுமுத்த ரீகத்தை வீசும்விசா லாட்சிபங்கன்
தன்னிகராங் காசியில்வாழ் சற்குருமுன் சென்றெனக்குள்
உன்னுமொரு தாரகத்தை போதுநா ளென்றென்றிங்
கன்னமே கேட்டுவந்தென் அகமகிழ விளம்புவையே. "

என்றும்,

" வெள்விடையான் காசி விசாலாட்சி யம்மைபங்கன்
நள்ளிருளி லாடகில நாதன்பாற் சென்றெனக்கிங்
குள்ளுயிராந் தாரகத்தை போதுநா ளென்றென்று
புள்ளினங்காள் கேட்டுவந்தென் பொய்யழியச்
[சொல்வீரே "

என்றும், வரும் அழகிய பாடல்கள் தாரகப் பத்தின் உள்ளுருக்கும் தன்மைக்குச் சான்றாக நிற்பன.

நிறைவுரை :

மரணத் தருவாயில் விசாலாட்சியம்மை தம் உத்தரியத்தால் வீச, இறைவன் தாரகமாகிய பிரணவத்தைச் செவியில் ஓத, சிவனடியார் முத்திப் பேறெய்துவர் என்ற நம்பிக்கைக்குச் சான்று கூறி நிற்கிறது தாரகப்பத்து.

சித்திரை மாதச் சிறப்பு நாட்கள்

14—4—89 வெள்ளி, தமிழ் வருடப் பிறப்பு, சீகாழியில் ஸ்ரீ உமாமகேசு
வரருக்கு உச்சிக்காலத்தில் புழுகாப்பு, புதுப்பஞ்சாங்கம்
வாசித்தல். நிம்பகுசுமபக்ஷணம், வசந்த நவராத்திரி
பூர்த்தி. ஸ்ரீ தில்லைவாழந்தணர் குருபூஜை.

15—4—89 சனி, திருவையாறு ஆத்மபூஜை, திருச்சி ஸ்ரீ மாத்ரு
பூதேசுவரர், ரத்நவதிக்குத் தாயாக வருதல். திருக்கடவூர்
ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்திக்கு அபிஷேகம். சித்திரைப் பெரு
விழாவில் சகோபுர ரிஷபவாகனக் காட்சி. ஆயில்யவிழா.

16—4—89 ஞாயிறு, திருக்கடவூர் ஸ்ரீ காலசம்காரமூர்த்திக்குக் காலை
யில் அபிஷேகம். இரவு காலசம்காரம்.

19—4—89 புதன், வேளூரில் மகாந்நியாச பூர்வருத்திரஜப மண்டலா
அபிஷேகம் ஆரம்பம். ஸ்ரீ உமாபதிசிவாசாரியர் குருபூஜை.

20—4—89 வியாழன், சைத்திரோத்ஸவ தீர்த்தம். சித்ரா பௌர்ணமி,
சித்ரகுப்த பூஜை. மாத பூஜையில் மருக்கொழுந்து
சாத்துதல். ஸ்ரீ இசைஞானியார் குருபூஜை.

21—4—89 வெள்ளி, திருவையாறு சப்தஸ்தானம். ஸ்ரீ திருக்குறிப்புத்
தொண்டர் குருபூஜை. தருமை ஆதீனம் 6 ஆவது
குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக

24—4—89 திங்கள், சங்கடஹரசதுர்த்தி. [சுவாமிகள் குருபூஜை.

28—4—89 வெள்ளி, சீகாழி ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் உற்சவம். திருக்
குறுக்கை, திருக்கடவூர்சம்வத்ஸராபிஷேகம். காளாஷ்டமி.
தருமை ஆதீனம் 12 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ
முத்துக்குமார தேசிக சுவாமிகள் குருபூஜை.

29—4—89 சனி, ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். தொண்டை மண்டல
ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய
சுவாமிகள் மடம்ஆதிகுருமுதல்வர் குருபூஜை. சித்தர்க்காடு
காழிச்சிற்றம்பல நாடிகள் குருபூஜை.

30—4—89 ஞாயிறு, சித்திரைச்சதயம். ஸ்ரீ அப்பர்சுவாமிகள் குருபூஜை.

2—5—89 செவ்வாய்,கருங்குயில்நாதன்பேட்டைசம்வத்ஸராபிஷேகம்.

3—5—89 புதன், பிரதோஷம். மாத சிவராத்திரி.

4—5—89 வியாழன், போதாயன அமாவாசை, அக்கினிநக்ஷத்திரம்

5—5—89 ஸ்ரீ சிறுத்தொண்டர் குருபூஜை. [ஆரம்பம், 5-24க்கு.

6—5—89 சனி, கிருத்திகை விரதம், வேளூர் கிருத்திகை, தருமை
ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயத்தில் ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.

7—5—89 ஞாயிறு, காரைக்கால் தருமபுரம் ஸ்ரீ யாழ்மூரிநாதசுவாமி
சம்வத்ஸராபிஷேகம். ஸ்ரீ மங்கையர்க்கரசியார் குருபூஜை

8—5—89 திங்கள், அக்ஷபதிருதியை, திரேதாயுகாதி. சூரியனார்
கோயில் ஆதி சிவாக்கிரயோகிகள் குருபூஜை.

9—5—89 ஸ்ரீ விறன்மிண்டர் குருபூஜை.

11—5—89 வியாழன், வைத்தீசுவரன்கோயில், ஆச்சாள்புரம் திருக்
குவளை திருவையாறு முதலிய தலங்களில்வைகாச உற்சவ

12—5—89 வெள்ளி, ஆயில்ய விழா.] ஆரம்பம்.

வெளிநாடு Regd. No. TN / M. M. 4

தருமை ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

விலைப் பட்டியல் - 7

1. திருப்புள்ளிருக்குவேளூர்த் திருப்பதிகங்கள் 0—50
2. திருக்கொட்டையூர், இன்னம்பர்திருப்பதிகம் 0—40
3. திருக்கடம்பூர்த் திருப்பதிகம் 0—50
4. திருஎதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி திருப்பதிகங்கள் 0—50
5. திருவஞ்சைக்களத் திருப்பதிகங்கள் 0—70
6. திருவேட்டக்குடி, திருத்தெளிச்சேரி திருப்பதிகங்கள் 0—60
7. திருக்கடவூர்வீரட்டம், திருக்கடவூர்மயானம் திருப்பதிகம் 1—00
8. திருப்புன்கூர், திருநீடூர்த் திருப்பதிகம் 0—75
9. திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடித் திருப்பதிகங்கள் 0—75
10. திருத்தெங்கூர், திருநெல்லிக்கா திருப்பதிகங்கள் 0—60
11. திருவாட்போக்கி, திருக்கடம்பந்துறை திருப்பதிகங்கள் 0—40
12. நாகளேச்சரத் திருப்பதிகம் 0—65
18. திருப்பழயாறைவடதளி, திருவலஞ்சுழித் திருப்பதிகங்கள் 0—80
14. திருவாஞ்சியம், திருநன்னிலத்துப்பெருங்கோயில் திருப்பதிகங்கள் 0—70
15. திருத்தென்குரங்காடுதுறை, திருநீலக்குடித் திருப்பதிகங்கள் 0—60
16. திருவெறும்பியூர், திருநெடுங்களத் திருப்பதிகங்கள் 0—60

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :— செயலாளர்,

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்
தருமபுரம் - மயிலாடுதுறை 609 001.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram,